விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (18.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டது

## மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சனம்

(நியூயோர்க்) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவோ அல்லது குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவோ நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எந்த வழிகாட்டுதல்களையும் வழங்கவில்லை என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பிரச்சினைகள் இருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழு ஒப்புக்கொண்டுள்ள போதும், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான மோசமான குற்றங்கள் குறித்த சான்றுகளையும் போர் தொடர்பான ஏனைய சட்டமீறல்களும் ஆணைக்குழு அறிக்கையில் அலட்சியம் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் மனித உரிமை அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளதாவது; (20ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட பொதுமக்கள் குறித்து அறிக்கையிலுள்ள கருத்து வியப்பானது

### சனல் 4 சுட்டிக்காட்டு

(லண்டன்)


வன்னி இறுதிப் போரின் போது குறைந்தளவு பொதுமக்களே கொல்லப்பட்டுள்ளனர் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளமை வியக்கத்தக்க விடயம் என பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் வெளியாகிய செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்களை குறிவைத்து இராணுவம் எத் தாக்குதலையும் நடத்தவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக யுத்த சூனியப் பிரதேசத்தில் இலங்கை இராணுவம் எத் தாக்குதலையும் நடத்தவில்லை என அவ்வறிக்கையில் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் குறைந்தளவு பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டமை வேடிக்கையான விடயம் என சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. அதில் ஐ.நாவின் அறிக்கையை அது இணைத்து சில ஆதாரங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையின் கொலைக்களம் என்னும் ஆவணப்படத்தை தயாரித்த காலம் மக்ரே இதில் பல விளக்கங்களைக்கொடுத்துள்ளார். மேலும் தண்டிக்கப்படாத குற்றங்கள் என்ற தலைப்பில் மற்றுமொரு 30 நிமிட ஆவணப் படம் ஒன்றை சனல் 4 தொலைக் காட்சி வெளியிட உள்ளது. அடுத்த மாதம் வெளியாகவுள்ள இந்த ஆவணத் திரைப்படத்தில் புதிய பல போர்க் குற்ற ஆதாரங்கள் இணைக்கப்படவுள்ளதாக சனல் 4 தெரிவித்துள்ளது. (பா-11)

## பிலிப்பைன்ஸில் புயல்; 436 பேர் உயிரிழப்பு



பிலிபைன்ஸில் நேற்றுத் தாக்கிய புயலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 436 ஆக அதிகரித்துள்ள தாக அந்நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. அதேவேளை மேலும் 162 பேர் காணாமல்போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயலினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அதிகமானோர் உயிரிழந்தனர். இவர்களில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்க ஐ.தே.க. வலியுறுத்து

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதும் வடக்கில் இருந்து இராணுவத்தை விலக்குவதும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. எனவே வடக்கில் இராணுவப் பிரசனத்திற்கான தேவை எதுவும் இல்லை.

முழுமையான சிவில் நிர்வாகத்தை மீள ஏற்படுத்துவதை நாம் விரும்புகிறோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இது பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மை வெளிப்படுத்த உதவும். முதலில் வடக்கு-கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அதன்பின் தேசிய பிரச்சினையின் ஏனைய சிக்கல்கள் குறித்து ஆராயலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், எதையும் அமுல்படுத்துவதற்கு முன் மக்களின் அடிப்படை உரிமைகளை அரசாங்கம் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அறிக்கை குறித்து ஆராய்ந்ததன் பின்னரே கருத்து

### ஐ.நா. பேச்சாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து உடனடியாக கருத்துக்களை வெளியிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை மறுப்புத் தெரிவித்துள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அரசாங்கத்தினால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டிருந்த நிலையில், அவ்வறிக்கை குறித்து ஐக்கிய நாடுகளின் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

இக் கேள்விக்குப் பதிலளித்த பர்ஹான் ஹக் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நன்றாக ஆய்வு செய்ய வேண்டியதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் (20ஆம் பக்கம் பார்க்க)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog | Sri Lanka Telecom | airtel | etisalat | Sri Lanka Telecom Mobitel We Care. Always. | (CEB) | WESTERN UNION MONEY TRANSFER | HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | சுன்னாகம் | மானிப்பாய் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சங்கானை

SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலவச அழகுக் கலைப் பயிற்சி

யாழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். உங்கள் கனவுகளை நனவாக்க உங்களுடன் இணைகின்றது.... **ORIFLAME**

சுவீடன் நாட்டு அழகு சாதன உற்பத்திப் பொருட்களை இலங்கையில் சந்தைப் படுத்துவதில் முதன்மையாக விளங்கும் ORIFLAME நிறுவனத்துடன் நீங்கள் இணைவதன் மூலம்

- இலவச அழகுக்கலை பயிற்சிகளையும் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்
- பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானமாக குறைந்தது ரூபா 10,000/- முதல் உழைக்கலாம்
- இன்னும் பல...

இலவச கருத்தரங்கு....

காலம்: 21.12.2011 நேரம்:-2.30P.M

இடம்:- Oriflame யாழ் கிளை(187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)

தொடர்புகளுக்கு :-0778848666,0772288243 (6980)




# கல்வி முதுமாணி கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதி

## பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவக தலைமை அலுவலகத்தில் மட்டும் நடத்தப்பட்டு வந்த கல்வி முதுமாணிபட்ட (MED) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு தேசிய கல்வி நிறுவகம் அனுமதி வழங்கியுள்ளது என தேசிய நிறுவத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி முதுமாணி நடத்துவதற்கு அதன் பீடாதிபதி திலஸ்கேயோக நாதன் அனுமதி வழங்கியதுடன் சகல உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்விமுதுமாணிக் கற்கை நெறியை பயில்வதற்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் விரும்புகின்றபோதிலும் மிகச் சொற்ப தொகையினருக்கே அனுமதி கிடைக்கின்றது. மேலும் கொழும்பு சென்று மேற்படி கற்கை நெறியைப் பயில்வதில் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இச்சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் மேற்படி கற்கை நெறி ஆரம்பமாவது ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுடையதாகின்றது.

இக் கற்றை நெறியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அபயரத்தின பண்டார மற்றும் அதிகாரிகள் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டனர்.

இந்தநிலையில் கல்வி முதுமாணி பட்டகற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தேசிய கல்வி நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (பா)


## ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா? எயிட்ஸ் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்!

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை



பெண்களுக்கான மாதப்பிரச்சனை, கருமுட்டை உற்பத்தியின்மை, வளர்ச்சியின்மையால் பாதிப்பா?

தாம்பத்தியக் குறைபாடா?

கவலை வேண்டாம்.

தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமையான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)

செல்: 0091 9842457673

100% உறுதி

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

டாக்டரின் நேரடி பேட்டியை விஜய் ரீவி, ராஜ் ரீவி, தமிழன் ரீவியில் காணலாம்.

1.12.2011ல் DAN TVயில் இடம் பெற்ற இன்றைய பிரமுகர் நிகழ்ச்சியில் டாக்டரின் நேரடிப் பேட்டியை www.dantv.tvயில் காணலாம்.

Website: www. Sexualproblem.in

Email: sridevisiddha@gmail.com

செல் : 0091 9600336009



இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமபுரம், சென்னை-89, இந்தியா.

APGraphic



## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் ஊழியர்கள் தேவை.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (6989)



## டொல்பின் வான் விற்பனைக்கு

62-xxxx எனும் தொடர் இலக்கத்தினையுடைய நல்ல நிலையில் உள்ள மனுவல் கியர், சுப்பர்GL சீற், ஓட்ட மற்றிக் கதவு ஆகியவையுடைய டொல்பின்ரக கைரொப் (High roof) கயஸ்வான் உடன் விற்பனைக்கு.

தொடர்பு

இல. 79, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

TP:-077 5473126, 021 2225076 (6984)



## பணிநிலை வெற்றிடம்

Elephant house வியாபார நிலையத்திற்கு முச்சக்கரவண்டி ஓட்டுனரும், (Ice cream விற்பனையாளராகவும் செயற்பட வேண்டும்) நிறுவனத்திற்கு கணக்காளர் பணிநிலைக்கு (ஆண்,பெண்) தேவை.

தொடர்பு :- 077 9910154, 021 4918407

Elephant house

58, நீராவியடி லேன், யாழ்ப்பாணம். (6983)



## உடனடி வேலைவாய்ப்பு (Management) (2012 January Batch)

சர்வதேசரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வடமாகாண யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/வவுனியா பிரிவுகளுக்கு O/L, A/L சித்தியடைந்த 18 - 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு முகாமைத்துவ பயிற்சியளிக்கப்படும். (ஆண்கள் மட்டும்)

- அனுபவம் அவசியமில்லை.
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 40000/- மேல் சம்பளம் பெறலாம்.

தொடர்புக்கு- 0777 274795 024 4907449 (6982)





# STUDY IN UK

Minimum IELTS 4.0 Required

OUR SERVICE ABSOLUTELY FREE

Before the Visa or After Getting Visa

(Lowest Course fee with O/L)







flex Institute

Step Towards a Bright Future

(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Wellawatte, Colombo 6.

Tel: 2364157

Hotline: 0777-761346

E-mail: flexinstitute@sltnet.lk

Web: www.flexinstitute.lk



union assurance — Trust in your tomorrow, today

## பதவி வெற்றிடம்

(யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ் பிராந்திய காரியாலயம்)

இலங்கையில் முதலிடத்திலிருக்கும் ஜோன்ஸ் கீல்ஸ் கோல்டிங்கின் இணை நிறுவனமான யூனியன் அஸ்யூரன்ஸ் யாழ் பிராந்திய அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. காப்புறுதித் துறையில் அனுபவமும், திறமையும் மற்றும் கடந்த காலங்களில் இத்துறையில் தமது பங்களிப்பினை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியோருக்கு தங்கள் கனவுகள் யாவும் நிறைவாகும் வண்ணம் உரிய பதவி வெற்றிடங்கள் காத்திருக்கின்றன. ஆகவே ஆண்கள், பெண்கள் இருபாலாரும் உடனடியாக தங்களது சுயவிபரக்கோவை மற்றும் 2 புகைப்பட பிரதி (முத்திரை அளவு Stamp size) களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:- யாழ் மாவட்டத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

Designation1. Sales Manager / Assistant Sales Manager.

Designation 2. Unite Development Managers.

Designation 3. Agency Development Officers.

1. காப்புறுதித்துறையில் முகாமையாளர் நிலையில் உள்ளவர்கள் மற்றும் குறைந்தது 5 வருட அனுபவத்தினை கொண்டவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 28 - 40.
2. காப்புறுதித்துறையில் முகாமையாளர் நிலையில் உள்ளவர்கள் மற்றும் குறைந்தது 3 வருட அனுபவத்தினை கொண்டவர்கள் விரும்பத்தக்கது.வயதெல்லை 28 - 40.
3. காப்புறுதித்துறையில் வேலை பார்க்க விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம். (காப்புறுதி துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது)

மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர்களிற்கு Car loan, EPF, ETF, Permanent Salary மற்றும் மேலும் பல சலுகைகள் அளிக்கப்படும்.

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலும் பல சலுகைகள் காத்திருக்கின்றன.

"யாழ் பிராந்திய முகாமையாளர்"

யூனியன் அஸ்யூரன்ஸ்

139, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(C-5216)

# ஒரே நாடு ஒரே மக்கள் என கூறுவதை விடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி கண்டன அறிக்கை

**ஒரே நாடு ஒரே மக்கள் என கூறுவதை விடுத்து எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.கேகாலை, எட்டியாந்தோட்டையில் உள்ள இந்து ஆலயத்திற்குள் சிங்களவர்களால் திட்டமிட்டு அங்குள்ள ஆலயத்தை மதியாமலும் அப்பாவி இளைஞர்களை காட்டுமிராண்டித்தனமாகவும் தாக்கியது. எமது வழிபாட்டு தல ங்களை தகர்த்து மீண்டும் எமது போராட்ட முகத்தை இவ் அரசு பார்க்க ஆசைப்படுகிறதா என பாராளுமன்றில் யோகேஸ்வரன் எம்.பி. கேள்வியெழுப்பியுள்ளார்.**

இச்சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா.உ.சீ. யோகேஸ்வரன் விடுத்துள்ள கண்டன அறிக்கை,

பழைமையும் எம் சமூகம் வாழ்வின் அடையாளமுமாக இப்பகுதியில் இருந்த இந்து ஆலயம் திட்டமிட்டு சிங்கள இளைஞர்கள் தாக்கியுள்ளமையுடன் எமது இளைஞர்கள் ஐவர் நன்கு திட்டமிட்டு வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவதினத்திற்கு முதல் நாளும் எமது இளைஞர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டு திரும்பிச் சென்றுள்ளனர். பின்னர் அதனைத் தொடர்ந்தே இப்பழிவாங்கல் நிகழ்வு அரங்கேறியுள்ளது.

எமது ஆலயங்களின் அமைவிடங்களையும் நினைவுச்சின்னங்களையும் அழிப்பதில் சிங்கள தேசம் கங்கணம் கட்டி அலைகிறது என்பது உலகறிந்த உண்மை. இவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இவ் இளைஞர்களினதும் செயற்பாடு அமைந்துள்ளதே என எமது மக்கள் சந்தேகப்படுவதை என்னால் உணரக் கூடியதாக உள்ளது.

எமது ஆலயத்தின் நடைமுறையில் உள்ள விடயங்களைக் கூறியதையே ஏற்றுக் கொள்ளும் மனநிலையற்ற வளர்ந்து வரும் சமுதாயமே இவ்வாறு என்றால் அவர்களை வழி நடத்துபவர்கள் எவ்வாறான மனநிலையில் இருப்பர் என உணரக் கூடியதாக உள்ளது.

எமது சமூகத்தின் பால் சிங்களத்தின் அண்மைக்கால போக்கு மிக தான்தோன்றித்தனமாக உள்ளதுடன் இது நீண்ட நாளைக்கு நீடிக்க விடாமல் தடுப்பதே சாலச்சிறந்தது என்பதையும் நினைவுபடுத்த விரும்புவதாகவும் இல்லாதவிடத்து எம்மையும் உங்களைப்போல் உருவாக்க எத்தனிக்கவேண்டாம்.

ஒரேநாடு என ஒவ்வொரு நாளும் கூறுவதை விட்டுவிட்டு எமது மக்களின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்தி சுய கௌரவத்துடன் வாழ்வதை உறுதிப்படுத்துமாறு அவ் அறிக் கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கட்டடத்திறப்புவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பீனிஸ் செஞ்சிலுவை சங்கத்தினால் ஆண், பெண் நோயாளர்களுக்கான நோயாளர் விடுதிகள், வைத்தியர் தங்குவதற்கான தங்குமிடக் கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

இக் கட்டடத் திறப்புவிழாவானது நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வினை யாழ்.செஞ்சிலுவை சங்கக்கிளை நடத்தவுள்ளது. இதில் இலங்கை செஞ்சிலுவை சங்க தலைமையக தலைவர், செயலாளர் மற்றும் பீனிஸ் செஞ்சிலுவைச் சங்க செயலாளர் நாயகமும், அரச பொறுப்பதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# இலங்கை கடற்படை மீது போர் தொடுக்க கோருகிறது பா.ஜ.க

(மேட்டுப்பாளையம்)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையை இலங்கை உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் இலங்கை மீது இந்தியா போர் தொடக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் மேட்டுப்பாளையத்தில் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது.

அப்போது அவர் கூறியதாவது, தமிழக மீனவர்களின் உரிமையை பெற்றுத்தர மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் தொடரும் பட்சத்தில் இலங்கை மீது போர் தொடுக்க இந்தியா தயங்கக்கூடாது என்று அவர் கூறினார். சபரிமலைக்கு தமிழக பக்தர்கள் செல்லக்கூடாது என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியது கண்டனத்திற்குரியது என்றும் இதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# துணுக்காய் பிரதேச சபையால் பொதுச் சந்தை புனரமைப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் நிதியுதவியுடன் மல்லாவி நகரத்தின் பொதுச்சந்தை புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது என துணுக்காய் பிரதேச சபைத்தவிசாளர் எஸ். இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பொதுச் சந்தையில் குடிநீர், மலசலகூடவசதி என்பன ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் சுகாதார முறைப்படி பழவகைகள் விற்பனை செய்வதற்கு பழக்கடைகளும் மாமிசவியாபாரக்கடைகளும் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் வியாபாரிகளிடம் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவு மையம் ஒன்றும் சுற்றுமதிலும் இதில் உள்ளடங்குகின்றன. (அ-3-15)


KALAIMAGAL International College

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வட பகுதியில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் புலமை சுமார் 25 வருடங்களாகத் தொலைக்கப்பட்ட அல்லது அக்கறை கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகின்றது.



இன்றைய உலகமயமாக்கலில் ஆங்கில அறிவு மிக மிக இன்றியமையாததாகக் காணப்படுவதனால் ஆங்கில மொழி மூலக் கல்வியின் அவசியம் காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு எமது கல்லூரி வட பகுதியில் ஆங்கிலமொழி மூலக் கல்வியை உள்வாங்கும் பொருட்டு பல இடங்களில் தனது கிளைகளை நிறுவியுள்ளது. எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் சிறப்பான செயற்றிட்டங்கள் வருமாறு:

- பாலர் வகுப்பு முதல் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை ( English Medium )
- சிறந்த ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சாதாரண மக்கள் முகம்கொடுக்கக்கூடிய மிகக் குறைந்த அளவு கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலம் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் கற்பிக்கும் கல்விக் கொள்கை.
- அரச பாடசாலைகளின் நேரசூசி அமைப்பு.
- விளையாட்டு, கலை, கலாசாரம் நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடுகளாக உள்வாங்கும் கல்விக்கொள்கை.
- மாணவர்களை உற்சாகப்படுத்தும் வருடாந்த பரிசளிப்பும், கலைவிழாக்களும்.

அனுமதிக்கு இன்றே முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு எமது தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்:

KALAIMAGAL International College
CHURCH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
T.P.:021 4923235, 0778834592, 0774904286, 0776548283

# போரின் வடுக்களையே சிந்திக்காது அவற்றிலிருந்து மீண்டெழுவோம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்ப கூடிய, நல்வழிப்படுத்தக்கூடிய இளைஞர்களை இழந்துவிட்டோம் அல்லது அவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு விட்டனர் என அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நாவலர் குருபூஜை தினத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாவலர் விழாவை துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று நடத்தியது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

1982ஆம் ஆண்டு 8 இலட்சத்து 50 ஆயிரம் பேர் யாழ்.மாவட்டத்தில் வாழ்ந்தனர். ஆனால் அதற்கு பின் கொடிய யுத்தத்தினால் மக்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். இன்று ஒரு இலட்சத்து 88 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 6 இலட்சத்து 15 ஆயிரம் மக்களே வாழ்கின்றனர். தற்போது யாழ். மாவட்டத்தில் சனத்தொகை 10 இலட்சத்துக்கும் அதிகமாக காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கொடிய யுத்தம் மக்களை இடம் பெயர செய்து விட்டது.

இன்று இங்கு வாழ்கின்றவர்கள் யாழ். மாவட்டத்தில் பிறந்து விட்டோமே என்ற விரக்தியில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் குடும்ப தலைவர்களாக 89 ஆயிரம் விதவைகள் வாழ்ந்து வருகின்றனர். இவ்எண்ணிக்கை சிறிய தொகையல்ல. அத்துடன் 50 ஆயிரத்துக்கும் மேலான மக்கள் தமது இல்லறங்களை இழந்து தெருவிலே நிற்கின்றனர். இவர்களது வாழ்வில் மிஞ்சியதெல்லாம் கண்ணீரே. வாடகை வீட்டில் குடியமர்ந்து அவர்கள் பெரும் இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

போர்க்காலங்களின் போது ஏற்படக்கூடிய இழப்புக்களையே நாமும் இழந்துள்ளோம். அவற்றினை நாம் பூதாகாரமாக எடுத்துக் கொள்ளாது அவற்றிலிருந்து மீள முயற்சிக்க வேண்டும்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியினையடுத்து உறவை இழந்து, உடைமையை இழந்து வாழ்க்கையை தொலைத்து தமது வாழ்வுக்காக ஏங்கி கொண்டு தவிப்பவர்களுக்கு நாம் என்ன செய்தோம் என்பதை நாம் அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

உலக பண்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட கலாசாரத்துக்கு ஒரு தனி இடம் உண்டு. சிறந்து விளங்கிய கலாசாரம் இன்று நலிவடைந்து செல்கின்றது.

பிரச்சினைகளுக்கு மத்தியிலும் எமது கலை, கலாசார பயன்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு கல்விமான்கள், மதத் தலைவர்கள், பத்திரிகைகள் என அனைவரும் செயற்பட்டு வருகின்றார்கள். அபிவிருத்திக்காக முதலில் வளமான வாழ்வினை மேம்படுத்த சமய தலைவர்களின் பங்கு அவசியம். இவர்களால்தான் மனங்களை அபிவிருத்தி செய்ய உதவமுடியும். மனங்களை விருத்தி செய்யாது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து பலனில்லை.

சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் பெருமான் வாழ்ந்த ஒரு புண்ணிய பூமியில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அன்று அவர்கள் செய்த தொண்டினை இன்று நாம் காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# சைவ பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்போம்

## சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுக்நாவலரின் காலத்தில் தழைத்தோங்கி நின்ற எம் சைவமும் தமிழும் இன்று குற்றுயிராய் கிடக்கின்றது. இந்நிலைமையை மாற்றுவதற்கு காலத்தை அறிந்து செயற்பட வேண்டியது நம் அனைவரினதும் கடைமையாகும் என இந்து சமய கலாசார திணைக்கள ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தெரிவித்தார்.

ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரின் 132 ஆவது குருபூசைத் தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சைவபரிபாலன சபையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கிறிஸ்தவன் பைபிள் வாசிக்க தெரியாவிட்டால் ஒரு முஸ்லிம் திருக்குர்ரான் ஓதத் தெரியாவிட்டால் ஒரு பௌத்தன் திரிபீடகம் வாசிக்கத் தெரியாவிட்டால் வெட்கப்படுகிறார்கள். ஆனால் ஒரு இந்து சமயத்தவன் திருமுறை படிக்க தெரியாவிட்டால் பெருமைப் பட்டு கொள்கின்றான். இதுதான் இன்றைய எமது சைவ நிலையாகும்.

பிற சமயத்தவர்கள் எமக்கு கொடுக்கும் தொல்லைகளை விட நாமே எமது சமயத்தை புறக்கணிக்கின்றோம். முன்னைய காலங்களில் சைவசமய தீட்சை பெறுவது மரபு. தீட்சை பெறாவிட்டால் திருமண வீடோ அல்லது இறந்த வீடோ ஆயினும்புறக்கணிப்பது வழமை. ஆனால், இன்று காசைக் காட்டினால் எல்லாம் நடைபெற்று விடும்.

கோயில்கள், திருவிழாக்கள், பிரசங்கங்கள் என அனைத்துக்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அழைத்து செல்வது வழமை. இன்று தொடர் நாடகங்களில் பெற்றோர்கள் ஊறித் திளைத்ததால் மாணவர்கள் எப்படி செல்வார்கள். சைவம், தமிழ் வளர்வது எவ்வாறு.

முன்னோர்கள் சொற்பொழிவை கேட்டு மதுவை மறந்தார்கள். ஆனால் இன்று ஆலயங்களில் சினிமாப் பாடல் இசைத்து மதுவில் மகிழ்கின்றனர். பிரசங்கத்தை கேட்பது தற்போது மிக அரிதாகி வருகின்றது.

சைவப் பண்பாட்டை, கலாசாரத்தினை சிதறடிக்கும் முயற்சி நாவலர் காலத்திலும் நடைபெற்றது. இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சிவ சின்னங்களில் ஒன்றான திருநீறு அணிய வெட்கப்படுகின்றனர். மாமிசம் சாப்பிடாவிட்டால் பிள்ளை நலிவுற்று போய்விடுவான் என்கின்றனர் பெற்றோர்.

இந்நிலை தொடருமானால் நாளைய சமுதாயம் எவ்வாறு பயன் உள்ளதாக அமையப் போகின்றது என்பது சந்தேகமே. இந்து சமய பண்பாட்டை வளர்ப்பதற்கும் காப்பதற்கும் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கோயில் குருமார்கள் என அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)



உலகில் மிக நீளமான புதுவருட வாழ்த்து அட்டையினை தயாரிக்கும் பணியில் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் ஈடுபட்டுள்ளனர். 195 அடி நீளம் மற்றும் ஐந்து அடி அகலமான இந்த வாழ்த்து அட்டை கின்னஸ் புத்தகத்தில் சாதனையாக பதியப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த அட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஜனவரி முதலாம் திகதி கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடைநிறுத்தப்படும் ரயில் சேவை

(கொழும்பு)

புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை அளுத்கம-களுத்துறை இடையிலான ரயில் போக்குவரத்து இடை நிறுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இந்த காலப்பகுதியில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையில் அளுத்கம - களுத்துறை இடையேயான ரயில் போக்குவரத்து இடம்பெறாதென ரயில்வே திட்டமிடல் பணிப்பளார் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் காலை மற்றும் மாலை வேளைகளில் அலுவலக சேவை, ரயில்களின் போக்குவரத்து அளுத்கம வரையில் இடம்பெறுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அதிவேக ரயில் மார்க்கமாக கரையோர ரயில் மார்க்கம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதால் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அளுத்கம - களுத்துறை இடையிலான ரயில் போக்குவரத்து முற்றாக தடைப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## மக்கள் உரிமையை ஒவ்வொன்றாக பறிக்கும் ஆட்சியை நாம் முற்றாக எதிர்க்கின்றோம்

மக்கள் உரிமையை ஒவ்வொன்றாக பறித்தெடுக்கும் ஆட்சியை நாம் முற்றாக எதிர்க்கின்றோம் என மக்கள் போராட்ட இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் ஜே.வி.பி.கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித்குமார தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கடத்தப்பட்ட லலித்குமார், குகன் முருகானந்தன் ஆகியோரை விடுதலை செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்.மாவட்ட அமைப் பாளர் லலித்குமார் வீரராஜ் மற்றும் அவரது சகபாடியான குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் கடந்த 10 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளனர். யாழ்ப்பாணம் ஆவரங் கால் பகுதியிலுள்ள குகன் முருகானந்தனின் வீட்டிலிருந்து மாலை 5 மணியளவில் யாழ். நகரை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோதே இவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பாக மறுநாள் அதாவது 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் எமது அமைப்பினால் முறைப்பாடு கொடுக்கப்பட்டது.

இதேவேளை இவர்கள் இருவரும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் கடத்தப்பட்ட இருவரையும் பற்றி இதுவரை எமக்கு எந்தவித தகவலும் பெற்றுத் தரப்படவில்லை .எனவேதான் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த வேண்டி ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## பிலிப்பைன்சில் புயல்; 130 பேர் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டில் தெற்கு பகுதியில் சுமார் 90 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் வீசியது. இதனால் அங்குள்ள மின்டாணவோ தீவில் பலத்த மழை கொட்டி பல இடங்களில் நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த புயல் மழைக்கு சுமார் 130 பேர் பலியானார்கள். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள்.

இதுவரை காயான் டி ஓரோ என்ற நகர் பகுதியில் இருந்து 97 உடல்களை மீட்புக் குழுவினர் மீட்தாக இராணுவ அதிகாரி தெரிவித்தார். இலிகான் நகரில் சுமார் 40 பேரை வெள்ளம் அடித்து சென்று விட்டதாக கூறப்படுகின்றது. (அ-2)

# வன்னி மக்களின் காணிப்பிரச்சினைக்கு முறையான தீர்வு கிடைப்பது அவசியம்

## சந்திரகுமார் எம்.பி.சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காணிப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களே. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே உச்சமான பாதிப்பை சந்தித்துள்ளனர். இவர்களிற் பலரிடம் தற்போது தங்கள் காணிகளுக்குரிய உறுதிகளோ, உரித்தாவணங்களோ இல்லை.

அவற்றைப் பெறக்கூடிய நிலையும் பலருக்கில்லை. அதனால் அவர்களின் காணிப் பிரச்சினைக்குரிய முறையான தீர்வொன்று அவசியம் என ஈ.பி.டி.பி.யின். நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி, மீள்குடியேற்ற அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

போரின் காரணமாக இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தங்களிடமிருந்த ஆவணங்களைத் தவற விட்டுள்ளனர். உயிரையே காப்பாற்ற முடியாத நிலையில் இருந்த மக்களால் எவ்வாறு ஆவணங்களையும் பொருட்களையும் காப்பாற்ற முடியும்.

யுத்தத்தினால் இந்தப் பகுதிகளிலிருந்து அரச திணைக்களங்கள் அழிவடைந்ததனால் அவற்றிலிருந்த ஆவணங்களும் அழிவடைந்துவிட்டன.

வீடமைப்புத் திட்டம் தொடக்கம் வாழ்வாதார உதவிகள் என அனைத்தையும் பெறுவதற்கு காணி அத்தியாவசியமாகும்.

ஆனால் காணி இருந்தாலும் அதற்குரிய ஆவணங்கள் இல்லாத நிலையிலேயே அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் உள்ளனர்.

இதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெற முடியாத நிலைக்கு அந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரத்து 438 குடும்பங்கள் தமக்கு காணியில்லாதவர்கள் பதிவு செய்துள்ளனர். இதேபோல கிளிநொச்சி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 750 குடும்பங்கள் காணியற்ற நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில்தான் நாம் அரசாங்கம் முன்னெடுத்த மண்ணின் மகிமைத் திட்டத்தை வரவேற்கின்றோம்.

இலங்கையில் ஏனைய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படுவது போன்று காணியற்றவர்களின் விபரங்களை அரச வர்த்தமானி மூலமோ அல்லது பத்திரிகைகள் மூலமோ அறிவித்து திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னமும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் ஆயிரக்கணகான மக்கள் தங்கியிருக்கும் நிலையே தொடர்கின்றது என அவர் தனது விவாதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாட்டில் தாய் மரணவீதம் வீழ்ச்சியடைந்து வருகிறது

(கொழும்பு)

நாட்டில் பிரசவத்தின்போது இடம்பெறும் தாய் மரணவீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ளதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. கடந்த வருடம் 31.8 வீதமாக காணப்பட்ட இந்தப் பெறுமதியில் தற்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமானத்தில் வீழ்ச்சி காணப்படுவதாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தீப்தி பெரேரா குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும் தற்போது நாட்டில் பதிவாகாத பிரசவத்தின் போதான தாய் மரணங்கள் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கர்ப்ப காலம் மற்றும் பிரசவம் இடம்பெற்ற 6 மாத காலங்களிற்குள் இடம்பெறும் மரணங்கள் இதில் உள்ளடங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தமது பணியகத்திற்கு அறிவிக்குமாறு வைத்தியகலாநிதி தீப்தி பெரேரா பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளார். எனவே அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் 0112692745 என்ற தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்களுக்கு அறிவிக்கமுடியுமென அவர் குறிப்பிடுகிறார். (அ-2)

# அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் அக்கறை கொள்ளவேண்டும்

## இலங்கை அரசாங்க பொதுச்சேவைகள் சங்கத்தின் செயலாளர்

(கொழும்பு)

போர்ச்சூழல் நிலவிய அச்சம் நிறைந்த கால கட்டத்தில் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடர்ந்து பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து விட்டு பல வருடகாலமாக வேலைவாய்ப்பின்றி ஏங்கிக் கொண்டிருக்கும் வடக்கு- கிழக்கை சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பினை அளிக்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

இவ்வாறு இலங்கை அரசாங்க பொதுச்சேவைகள் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் 2005 ஆம் ஆண்டு 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அதற்குப் பின்னரரான காலத்தில் பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்திசெய்தபட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதன் காரணமாக வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை நாட்டில் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்படுகின்றமை கவலை தரும் விடயமாகும்.

வடக்கு- கிழக்கை பொறுத்தமட்டில் இங்கு நிலவிய போர்ச்சூழல் காலத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், திடீர் சுற்றிவளைப்புக்கள், சந்தேகத்தின் பேரிலான கைதுகள், காணாமல் போதல் என்பவற்றுக்கும் மத்தியில் அச்சமான சூழலில் உயிரைக் கையில்பிடித்த வண்ணம்பல்கலைக் கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பட்டதாரிகள் இன்று விரக்தியின் நிலையில் மனக்காயங்களுக்குள்ளாகி தொழில் இன்றி வாழும் துன்பகரமான சூழலில் உள்ளனர்.

தற்போதைய அரசாங்கம்வேலையற்ற பட்டதாரிகளின் நலனில் அக்கறை செலுத்தி அவர்களுக்கு ஏற்புடையதான அரச நியமனங்களை வழங்கி அவர்களுக்கான ஆறுதலை அளிக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்.

இவர்களுக்குள் பலர் வேலைவாய்ப்பு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையின் நிமித்தம் திருமணமாகி இன்று குடும்பச் சுமையை தாங்குவதற்காக கூலித் தொழிலில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் உள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)


Peninsula Super Mall

Super Market Services

சகல பொருட்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

PSM



2000/- தொகைக்கு பொருட்களை கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன

வகை வகையான தரமான அனைத்து பொருள்களை பெற்றிட இன்றே நாடுங்கள்...

Parking Facility Available

PSM

No: 127, Kandy Road,
Kachcheri,
Jaffna.
021 222 1848
psmjaffna@gmail.com

பொதி செய்யப்பட்ட பலசரக்கு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பால்மா வகைகள்
ஐஸ் கிறீம் வகைகள்
குளிர்பானங்கள்
பழ வகைகள்
பழ ரசங்கள்
இறைச்சி வகைகள்
அன்பளிப்பு பொருட்கள்
கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடல்கள்
கேக் தயாரிக்கும் பொருட்கள்


# மாந்தை கிழக்கில் இருந்து யாழ்ப்பாணம் வவுனியாவுக்கு பேருந்துசேவை அவசியம்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இருந்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு செல்வதற்குரிய பேருந்து சேவை இல்லாமையினால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யுத்தத்திற்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபையினுடைய பேருந்துகள், வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பேருந்து சாலைகளில் இருந்தும் தலா ஒவ்வொரு பேருந்து வீதம் பனங்காமம் கிராமம் வரை நடைபெற்றது.

தற்பொழுது மீள்குடியேற்றத்தின் பின்னர் இத்தனியார் பேருந்து சேவையானது தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் தனியார் பேருந்து சங்கத்தினால் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்படி பனங்காமத்தில்இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேருந்து சேவையானது துணுக்காய் வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எனவே மாந்தை கிழக்கிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்செல்கின்ற மக்கள் துணுக்காயில் இறங்கி வேறாரு பேருந்தில் பயணத்தை தொடர வேண்டிய நிலையும் உள்ளது.

இதனால் க்ர்ப்பிணிகள் மற்றும் நோயாளர்கள், அரச அலுவலர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். வவுனியாவிற்கும் இதே நிலை காணப்படுகின்றது.

எனவே யாழ். மாவட்டத்திற்கான சேவையினையும் வவுனியா மாவட்டத்திற்கான சேவையினையும் தினசரி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் ஒன்றுகூடலின் போது மாந்தை கிழக்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# நூல் வெளியீட்டு விழா

(சாவகச்சேரி)

சிவஸ்ரீ சிதம்பர நாதக்குருக்கள் எழுதிய திருமணப் பொருத்தம் என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆயிலடி வீரகத்தி விநாயகர் திருமண மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை சிவஸ்ரீ சி.கிருபாகரக்குருக்கள் வெளியிட்டு வைக்க மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் பெற்றுக் கொள்வார்.

நூலிற்கான நயப்புரையினை பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா நிகழ்த்தவுள்ளார்.

(அ-3-29)

# விவசாயிகளுக்கான கடனாக 500 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது

(நல்லூர்)

அச்சுவேலி மக்கள் வங்கியினால் பெரும்போக செய்கைக்காக புத்தூர், அச்சுவேலி கிராமத்தில் விவசாய கடனுக்கு விண்ணப்பித்த விவசாயிகளுக்கு 500 மில்லியன் ரூபா விவசாயக்கடன் வழங்கியுள்ளதாக அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராஜா தெரிவித்துள்ளார்.

இக்கடன்கள் விவசாய சம்மேளனத்தின் கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தரின் சிபாரிசுடன் விவசாயக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் பெரும்போக செய்கைக்கு கூடுதலாக் விவசாயக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-3-134)

# பட்டியல் நிலுவைகளை செலுத்த அறிவுறுத்தல்

யாழ்.குடாநாட்டிலுள்ள இலங்கை மின்சாரசபையின் அரச மற்றும் தனியார் மின் பாவனையாளர்கள் தங்களது பட்டியல் நிலுவைகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் முன் அறிவித்தல் இன்றி மின்துண்டிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.பிராந்திய மின் பொறியியலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் மின்பட்டியல் பணத்தினை இல.500, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகத்திலும் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளிலும் பணத்தினை செலுத்த முடியும்.

பட்டியல் நிலுவைகள் செலுத்தப்படாதவிடத்து மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டால் மின்பட்டியல் நிலுவையுடன் மேலதிகமாக 800 ரூபா மீள் இணைப்பு கட்டணமாக செலுத்தப்பட வேண்டியிருக்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ)

# திவிநெகும திட்டத்தின்கீழ் தென்னங்கன்றுகள் வழங்கல்

(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் திவிநெகும திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் தென்னைப்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன் ஒருகட்டமாக பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவகர்கள் மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

தென்னை பயிரிடக்கூடிய இடவசதி உள்ள அனைவருக்கும் இத் தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் நேற்று சனிக்கிழமை சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களுக்கு 3 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் 2 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இதுவரை நெல்லியடி, உடுப்பிட்டி, சண்டிலிப்பாய், நெடுங்கேணி, செட்டிகுளம், கரவெட்டி, நாகர் கோவில், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களுக்கு தலா 3 ஆயிரம் தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-3-15)

# வலி.மேற்கு பிரதேசசபை பகுதிகளில் திண்மக்கழிவுகள் அகற்றும் நடவடிக்கை

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சேரும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு அராலி கிழக்கில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஐ.நாகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதி திங்கட்கிழமைகளில் சுழிபுரம் பகுதியிலும் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் சங்கானை பகுதியிலும் பிரதி புதன்கிழமைகளில் வட்டுக்கோட்டைப் பகுதியிலும் பிரதி வியாழக்கிழமைகளில் அராலிப் பகுதியிலும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சுழிபுரம் கிழக்குப் பகுதியிலும் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் சங்கானை சந்தை உட்பட நகரப்பகுதிகளிலும் கழிவுப் பொருட்களை சேகரித்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறன.

மேலும் பொதுமக்கள் தமது வீடுகளில் சேரும் கழிவுகளை அகற்றுவதற்கு பிரதேச சபையின் கழிவு அகற்றும் உழவு இயந்திரங்களுக்கு சிறிதளவு கட்டணங்களை செலுத்தி அகற்றி கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# வாரம் ஒரு தகவல்

## மயக்கம் தெளியுமா?

"சேர், இவர் திடீரென்று மயக்கமாகி கீழே விழுந்து விட்டார்! உடனே போய் ஒரு வெங்காயம் எடுத்துக்கொண்டு வாருங்கள்!"

"இதோ என்னுடைய பையிலிருக்கும் வெங்காயம் இப்போதுதான் நான் சந்தையில் இருந்து வாங்கியது என்று எடுத்துக் கொடுத்தார்"

"மிகவும் நன்றி"

"சரி அதை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஒரு சிறு துண்டு வெங்காயத்தை எடுத்து மயக்கமடைந்தவரின் மூக்கிற்கு அருகே சிறிது நேரம் வைத்திருந்தால் அவருக்கு மயக்கம் தெளியும்"

"நீங்கள் எல்லா விபரமும் தெரிந்தவர்தான் போலிருக்கிறது"

"ஒருவர் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டால், நாம் உடனே என்ன செய்ய வேண்டும்? கதவு, ஜன்னல் ஆகியவற்றை திறந்து விடவேண்டும். கூட்டத்தை விலக்க வேண்டும். காற்றோட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தலைக்கு தலையணை வைக்கக் கூடாது. ஏனென்றால், மூளைக்கு இரத்த ஓட்டம் உடனடியாக தேவைப்படும். தலையணை வைத்தால் அது தடைப்படும். அவரை மல்லாக்கப் படுக்க வைத்து ஒருபுறமாகத் திருப்பி வைக்க வேண்டும். உடைகளை தளர்த்தி விடவேண்டும். தேவை ஏற்படின் செயற்கை முறையிலே சுவாசம் கொடுக்கலாம். மயக்கமாக இருக்கின்ற போது வாய் வழியாக எதுவும் கொடுக்கக் கூடாது. மயக்கம் தெளிந்த பின்னர்தான், உதடுகளைத் தண்ணீர் கொண்டு தடவி விடவேண்டும். பின்னர் தேநீர், கோப்பி, தோடம்பழச்சாறு ஏதாவது குடிக்கக் கொடுக்கலாம்"

"இவ்வளவு விடயமும் உங்களுக்கு யார் சொன்னது?"

"இதோ மயக்கம் போட்டு விழுந்து மல்லாக்க கிடக்கிறாரே இவர்தான் கற்றுத்தந்தது"

"இவரா?"

"ஆமாம். இவர்தான் என்னுடைய வைத்தியர்"

"எனக்கு மயக்கம் வருகிறது என்று மருந்து வாங்க நேற்று இவரிடம் வந்தேன். ஊசி போட்டு மருந்தும் வழங்கினார். சுகநலன்களைப் பற்றி நாளைக்கு வந்து தெரிவிக்கும்படியாகச் சொன்னார். நானும் வந்து சொன்னேன்"

"எவ்வாறு விளக்கம் தெரிவித்தீர்கள்?"

"நீங்கள் நேற்று வழங்கிய மருந்தால் நான் உடனடியாக சுகமடைந்து விட்டேன் என்றுதான் சொன்னேன்"

"அவ்வளவுதான். உடனே மயக்கமாகி இப்படி மல்லாக்க விழுந்து விட்டார் சேர்!"

தென்கச்சிகோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

18.12.2011
(மார்கழி 02, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
அட்டமி பிற்பகல் 2.59 மணிவரை
உத்தரம் மாலை 6.37 மணிவரை
இராகுகாலம் 4.53-6.23 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை
அட்டமி-நவமி.

**மேடம்** நண்பர்களால் பாராட்டப்படும் சந்தர்ப்பமுண்டு, சூழ்நிலைக்கேற்ப குணத்தை மாற்றியமைப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடையும், தொழில் வளர்ச்சியுண்டு.

**இடபம்** காலைப் பொழுதே நல்ல செய்திகள் வந்து சேரும், பாராட்டும் புகழும் கூடும், சொத்துக்கள் தொடர்பில் எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்,யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வளர்ச்சி அதிகரிக்க கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்** ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், கூட்டுமுயற்சி வெற்றி தரும், பிரயாணங்களால் நன்மையுண்டு, பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவ முன்வருவர்.

**சிங்கம்** விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும்,தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** அமைதி வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்,தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை,சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்** இன்பங்கள் வந்து சேர கண்ணனை வழிபட வேண்டிய நாள்,மாலை நேரப் பயணத்தால் பணவரவுகள் கிடைக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்,சயன சுகக்குறைவான நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்,குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்,தொழிலால் வருமானமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** கௌரவம்,அந்தஸ்து உயரும் நாள், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் கிடைக்கலாம்,போசன சுகமுண்டு, எடுத்த காரியம் கைகூடும்.

**மகரம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,குறை சொல்பவர்களே உதவி செய்யும் வாய்ப்புண்டு,தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு,புதிய சிந்தனைகள் தோன்றும்.

**கும்பம்** போசன சுகமுண்டு,எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்படலாம்,சில எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடலாம்,செலவுகள் அதிகரிக்கும்,தொழில் நன்மையுண்டு.

**மீனம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும், பிரயாண நன்மையுண்டு,கண்ணன் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும், களஸ்திர நன்மையுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 110 | 75 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 |
| தக்காளி | 140 | 180 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 60 | 60 | 70 |
| புடோல் | 40 | 80 | 90 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 70 |
| பாகற்காய் | 120 | 180 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | -- | 60 | 70 |
| பயற்றங்காய் | 110 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 50 |
| பீற்றூட் | -- | 140 | 70 |
| கறிமிளகாய் | 160 | 180 | 140 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 200 | 130 |
| கத்தரி தம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 18 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

# ஜனநாயக கொள்கைகளை நிலைநாட்ட ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும்

## நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

**ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. அத்தோடு நான்காம் கட்ட ஈழப்போரில் 11 ஆயிரத்து 812 விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஊடக ஒடுக்குமுறை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள் மீதும் ஊடகங்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ளும் சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் ஆகியன உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை மனித உரிமை அம்சங்களாகும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனநாயக கொள்கைகளை நிலை நாட்ட வேண்டுமாயின் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களின் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் இன சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த வழிகோலும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோர் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய தண்டனை வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுதந்திரமாகச்செல்லக்கூடிய பின்னணியை அரசாங்கம் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு.கோரியுள்ளது.

**ஈழப்போரில் 11, 812 விடுதலைப் புலிகள் மரணம்**

இலங்கையில் இடம்பெற்ற நான்காவது கட்ட ஈழப்போரில் 11 ஆயிரத்து 812 விடுதலைப் புலிகள் மரணமடைந்துள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலையில் போர் தொடங்கியதில் இருந்து 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்தது வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தின் படைப்பிரிவிற்கும் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கால கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் தரப்பில் 5 ஆயிரத்து 556 பேர் கொல்லப்பட்டனர் என்றும் போரின் போது 169 இராணுவத்தினர் காணாமற்போனதாகவும் 28 ஆயிரத்து 414 படையினர் காயமடைந்ததாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் 22 ஆயிரத்து 247 பேரை இந்தக் காலப்பகுதியில் இழந்துள்ளதாகவும் இவர்களில் 11 ஆயிரத்து 812 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சீருடைகளை வைத்தும்கமுத்துப்பட்டி மூலமும் மேலும் புலிகளின் தகவல் தொடர்புகளை இடைமறித்தும் இதனை உறுதி செய்ததாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**600 பொலிஸாரின் படுகொலை**

600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரையில் விசாரணை நடத்தப்படாமைக்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இருவரும் சாட்சியமளித்த போதும் விசாரணை நடத்தப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமென ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## போலி.அ.அட்டையுடன் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் கைது

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 4 மாணவர்கள் போலி தேசிய அடையாள அட்டைகளை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு கல்கிஸ்சை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கல்கிஸை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாணவர்களுக்கு போலி அடையாள அட்டைகளை பெறுவதற்கு உதவிய நபர் மற்றும் உதவியாளராக செயற்பட்ட பெண் ஒருவர் உட்பட மேலும் மூவரும் கல்கிசை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர்களில் ஐவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மூவரும் நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## இந்தியாவின் கைத்தொழில் கூட்டுறவு ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

இந்திய கைத்தொழில் கூட்டுறவு ஒன்றியத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் கடந்த 11 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தனர்.

மேற்படி ஒன்றியத்தின் உப தலைவரும் இன்போஸிஸ் நிறுவனத்தின் நிறைவேற்று உபதலைவருமான எஸ்.கோபாலகிருஷ்ணன், ரி.ரி.அசோக், எஸ்.சந்திரசேகர், எஸ். பாலசுப்பிரமணியம், நவீன்பன்சல், பிரணப்கே.போஸ் பிஜ் வீஜேக்கப்,ஸ்ரீகாந்த், லக்ஷ்மி வரதன்,ரஞ்சன் மாலிக், கிதிராங், எஸ்.ஜெ,ஜீரிசன்மா ஆகியோரே இலங்கைக்கு வந்த பிரதிநிதிகளாவர்.

இக்குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ரிஷாத் பதியூதீன், இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா, ஏற்றுமதி அபிவிருத்தி சபைத்தலைவர் ஜானக ரத்நாயக்க, வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். கோத்தபாய ஜயரத்ன ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தியக் கைத்தொழிலுக்கு முன்னுரிமை வழங்கும் நாடு இலங்கையென்பதை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய மேற்படி பிரதிநிதிகள் குழுவினர் இந்திய கைத்தொழில் கூட்டுறவு ஒன்றியம் இலங்கையிலுள்ள பொருத்தமான நிறுவனங்களுடன் பங்காளிகளாக முடியுமெனவும் இலங்கை மாணவர்களுக்கு மைசூரிலுள்ள இன்போஸிஸின் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.2012 ஜனவரி 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை ஐதராபாத்தில் நடைபெறவுள்ள பங்குடைமை உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக அமைச்சர் ரிஷாத் தெரிவித்தார்.

சிறிலங்கா எக்ஸ்போ 2012 கண்காட்சியில் கலந்து கொள்ள வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவை அனுப்புவதாகவும் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து கண்காட்சிக்கு ஊக்கமளிப்பதாகவும் பிரதிநிதிகள் குழுவினர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் தெரிவித்தனர். (அ-2)

## நமது நாட்டின் சட்டம் இரண்டு விதமாக அமுல்படுத்தப்படுகிறது

### மல்வத்துவபீடம் அறிவிப்பு

(கொழும்பு)


நமது நாட்டின் சட்டம் இரண்டு விதமாக அமுல்படுத்தப்படுகின்றது என மல்வத்துவ மாநாயக்க தேரரான திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கலதேரர் தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களின் நண்பர்களுக்கு ஒரு விதமாகவும் மாற்றுக் கருத்துடையவர்களுக்கு வேறுவிதமாகவும் நாட்டின் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களது ஆலோசனைகள் தற்போது எடுத்துக் கொள்ளப்படுவதில்லை எனவும் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மல்வத்து மாநாயக்க தேரரை சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு பல தடவை எழுத்துமூலம் கோரிய போதிலும் பலன் கிட்டவில்லை.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்திருக்கும் இந்தப் போராட்டம் வரவேற்கத்தக்கது என தெரிவித்துள்ளார். (அ-2)







வேலணைக் கோட்ட முன்பள்ளிகளின் மழலைகள் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் , மாணவர்கள் மாலை அணிவித்து வரப்படுவதனையும் மாணவர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

எட்டாமிடத்தில் சனி! எச்சரிக்கை தேவை இனி!

**நேரம்,காலம் பார்த்து செய்தால் நினைத்ததை சாதிக்கலாம் என்று சொல்லும் மீன இராசிநேயர்களே!**

நீங்கள் வளைந்து கொடுத்து வாழ்க்கை நடத்துபவர்கள். அடுத்தவர்கள் மீது அதிக அளவு அன்பு செலுத்தி அதன் மூலம் ஏமாற்றங்களை சந்திப்பவர்கள்.உங்கள் இராசிநாதனாக தேவகுரு அமைவதால் சமுகத்தில் உயர்ந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

உங்கள் இராசிநாதனுக்கு எதிரியாக சுக்ரன் இருப்பதால் திருமண காலத்தில் அதிக பட்ச பொருத்தம் இருப்பதோடு வரனின் ஜாதகத்தில் தெசாசந்தி இல்லாமல் இலக்கினப்படியும் சஷ்டாஷ்டம தோஷம் இல்லாமல் தேர்ந்தெடுத்தால்தான் சந்தோஷமான வாழ்க்கைய நீங்கள் அமைத்துக் கொள்ள இயலும்.

கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளமாட்டீர்கள். கொடுக்கல்-வாங்கல்களில் கறாராக இருப்பீர்கள். குறிப்பாக உங்கள் இராசிநாதன் குரு இருக்கும் சார பலமறிந்து பரிகாரங்களைச் செய்தால் பணவரவும் பெருகும். பாராட்டும்படியான வாழ்க்கையும் அமையும்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு சனிப்பெயர்ச்சி சாதமான பெயர்ச்சிதானா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### அடியெடுத்து வைக்கிறது அஷ்டமத்துச் சனி!

மார்கழி 5 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அங்கிருந்து கொண்டு முறையாக 2,5,10 ஆகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் சனி எதையும் திட்டமிட்டு செய்ய இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தில் அடிக்கடி ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். எனவே நோய்க்கான அறிகுறி தெரியும் முன்பே அதற்குரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை சனி பன்னிரண்டாமிடத்திற்கும் அதிபதி என்பதால் கெட்டவன் கெட்டிடில் கிட்டும் இராஜயோகம் என்பதற்கிணங்க நீங்கள் திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரும்.

இருப்பினும் சனியின் ஆதிக்கத்தில் சிக்கி இருக்கும் உங்களுக்கு சந்தோஷங்களே நாளும் வந்து சேரவும், பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலவும் பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் இருப்பதோடு எட்டு எள்தீபம் ஏற்றி சனி கவசம் பாடி சனி பகவானை வழிபட்டு வாருங்கள். நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும். குல தெய்வ வழிபாட்டிலும் கவனத்தை செலுத்துங்கள்.

### மந்தனின் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!

உங்கள் இராசிக்கு 8 இல் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 2,5,10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. வீட்டு பராமரிப்புச் செலவுகள் கூடும். சேமிப்புகள் கரையும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம் தான்.

வாக்கு ஸ்தானாதிபதி செவ்வாயாக இருப்பதால் சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்களிடம் ஆலோசனைகளையும் பெற்று நடப்பது நல்லது.

சனியின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் படிப்படியாக தீரும். அவர்களின் கல்விக்காகச் செலவிடுவீர்கள். சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டு முயற்சியிலும் வெற்றி கிடைக்கும்.

சனியின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் புதிய தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புக்கள் கைகூடி வரலாம். ஆனால் கூட்டாளிகள் சரியானவர்களா? என்பதை யோசித்து கொள்ளுங்கள். பங்குதாரர்கள் சரியாக அமையாவிட்டால் ஏமாற்றத்தை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும் அல்லவா? எனவே விழிப்புணர்ச்சி கூடுதலாகச் செலுத்த வேண்டிய நேரமிது.பெற்றோர்களின் உடல் நலத்திலும் கவனம் தேவை.

## நேரம்,காலம் பார்த்து எதையும் செய்தால் நினைத்ததை சாதித்துக் கொள்ளலாம்

### குருப்பெயர்ச்சிக்காலம்

துலாம் இராசியில் சனி பகவான் சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப்போகின்றது. 17.05.2012 இல் இடபத்திலும் 26.05.2013 இல் மிதுனத்திலும் 13.06.2014 இல் கடகத்திலும் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

இடபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலத்தால் 7,9,11 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே கல்யாண கனவுகள் நனவாகும். கொடி கட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் அகலும்.

மிதுனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே இழப்புக்களை ஈடுசெய்ய வாய்ப்புக்கள் உருவாகும். தட்சணா மூர்த்தி, முருகப்பெருமான் ஆகியோரை வழிபட்டு வந்தால் தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும். இடையூறாக வந்த எதிரிகளும் விலகுவர்.

கடகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 1,9,12 ஆகிய இடங்களில் பதிவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பதவி வாய்ப்புக்கள் வந்து சேரும். வீடுகட்டிக் குடியேறும் முயற்சியிலும் வெற்றி காண்பீர்கள்.

### இராகு-கேது பெயர்ச்சிக் காலம்.

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலா வரப்போகின்றார்கள்.

முதல் இராகு- கேது பெயர்ச்சிக்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.எதிர்பாராத சில இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.அடுத்த இராகு கேது பெயர்ச்சிக் காலத்தில் நீண்ட தூரத்திற்கு மாறுதல் ஆகும் வாய்ப்புக்கிட்டும். சுய ஜாதகம் வலுவாக இருந்தால் அந்நிய தேசப் பயணம் கூட கிட்டும். 2,9 க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் ஆறுமுகப்பெருமான் , வள்ளி-தெய்வானையையும் வழிபட்டு வாருங்கள்.

### சனியின் வக்ரகாலம் பொற்காலமாக மாற...

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 11,12 க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் வளர்ச்சியும் தளர்ச்சியும் இணைந்தே செயற்படும். 12 க்கு அதிபதி வக்ரமடைவது நல்லதுதான். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். இலாபாதிபதி வக்ரம் பெறுவதால் உடனுக்குடன் அது செலவாகி விடும். எனவே இந்த வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது.

### அஷ்டமத்துச் சனியில் அதிக கவனம் தேவை!

இதுவரை உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், ஏராளமான குடும்பப் பிரச்சினைகளை சந்திக்க வைத்திருப்பார். 11,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான் இலாபத்தைக் கொடுத்தாலும் இரு மடங்கு விரயத்தையும் கொடுத்திருப்பார். வங்கிச் சேமிப்பு கரைந்திருக்கலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் நிலைத் தொல்லைகளைக் கொடுத்து மன நிம்மதியையும் இழக்க வைத்திருக்கலாம்.

சனியை நம்பினால் சந்தோஷம் கிடைக்கும். பணியில் ஏற்பட்ட தொய்வும் அகலும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும். வீடு மாற்றம், இடமாற்றங்கள், நாடு மாற்றம், வாகன மாற்றம் போன்றவைகள் விரும்பியபடியே அமையும்.

சிவல்புரிசிங்காரம்

### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

வியாழன் தோறும் விரதமிருந்து தட்சணாமூர்த்தியையும் சனிக்கிழமையும் தோறும் அனுமனையும் வழிபடுவது நல்லது.

யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டால் யோகங்கள் வந்து சேரும்.

சனியின் சந்நிதியில் வழிபடும் பொழுது,
எதிர்ப்புகள் விலகி ஓட
இன்பங்கள் நாளும் சேர
மதிப்புடன் வாழ-ஈசா!
மனங்கனிந்து அருள்வாயே!

என்று பாடுங்கள்.நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும். (முற்றும்)

# தியானம்



ஆன்மீகம் 13

## ஆனந்தத்தின் வாசல்

மனிதனின் மனமும், உணர்ச்சிகளும் மட்டும்தான் ஒத்திசைவாய் இல்லாததற்கான காரணங்களாய் இருக்கின்றன. ஏனென்றால், அவன் இவற்றோடு இணக்கமாய் இல்லை. எனவே யோகா என்பதே எல்லாவற்றோடும் இணக்கமாய், ஒத்திசைவாய் இருக்கும் நிலையை ஏற்படுத்தி கொள்வதுதான். ஆனால், நீங்கள் புரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், இந்த ஒத்திசைவான சூழ்நிலைக்கு யோகா காரணமல்ல. உயிர்த்தன்மையே அப்படித்தான் இருக்கிறது. படைப்பே அப்படித்தான் இருக்கிறது. அவற்றோடு ஒத்திசைவாய் இருக்கும் போது நீங்களும் அப்படித்தான் இணக்கமாய் இருக்கிறீர்கள். அப்படி இல்லாவிட்டால் நீங்கள் இணக்கமாய் இல்லை என்றே பொருள். இணக்கமாய் இருப்பதையும், அமைதியையும், மகிழ்ச்சியையும், நாம் தேடிக்கண்டுபிடிக்கவோ, உருவாக்கவோ தேவையில்லை. இவையெல்லாம் நமக்குள் இயல்பாகவே இருக்கும் தன்மைகள். ஆனால், இவற்றை இயல்பற்ற நிலைகளாக நாம் உருவாக்கிவிட்டோம். யோகா என்பது நாம் இயல்பான தன்மைக்கு திரும்பி வருவதற்கான ஒரு கருவி, அவ்வளவு தான்.

கேள்வி: போதியளவு தேர்ச்சியில்லாத ஒருவரிடமிருந்து யோகாவைக் கற்றுக்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் என்ன?

சத்குரு: நீங்கள் அப்படிக்கற்றுக் கொள்வதை மிகவும் முக்கியமாகக் கருதினால், ஆபத்து நேர்ந்திட வாய்ப்பிருக்கிறது. ஆனால், பொதுவாக மக்கள் அவற்றை அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை. அதைப் பற்றிப்பேசிக் கொள்கிறார்கள். ஆனால், பயிற்சிகளை மேற்கொள்வதில்லை. அப்படியிருந்தால் பரவாயில்லை. ஆனால், அவர்கள் பயிற்சிகளை மிகவும் தீவிரமாகத் தொடங்கிவிட்டால், ஒரு முறையில்லாத யோகப்பயிற்சியால் பலவிதமான பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதே நேரத்தில் அதில் அவர்கள் சில பலன்களையும் பார்க்கிறார்கள். இன்று யோகப் பயிற்சியைத் தொடங்குகிறார்கள். அவர்களுடைய தலைவலி போய் விடுகிறது. அதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால், பயிற்சியைத் தொடர்ந்து செய்வதாக இருந்தால், முறையான யோகப்பயிற்சியாக இல்லாவிட்டால் பலவிதமான பிரச்சினைகள் வருவதற்கு வாய்பிருக்கிறது.

உங்களிடம் ஒரு கார் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் ஏதோ ஒரு பிரச்சினை என்பதால் அதிலிருந்து என்ஜினைக் கழற்றி ஏதோ செய்து திருப்பி அதிலே பொருத்தி விடுகிறீர்கள். தினமும் அதே போல காரிலிருந்து என்ஜினைக் கழற்றி அதிலிருந்து ஏதோ ஒருபகுதியை வெளியே எடுத்துவிட்டு பொருத்திக் கொண்டே இருந்தால் நாளடைவில் அந்த என்ஜினில் எதுவுமே இருக்காது. வெறும் உலோகக்குவியல் மட்டும்தான் இருக்கும். இது உங்களுக்கும் நடக்கமுடியும் அதே விதமாக இல்லாவிட்டாலும், சரியான முறையில் நீங்கள் யோகப்பயிற்சிகளை மேற்கொள்ளாவிட்டால், பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, சரியான யோகா என்றால் என்ன?

இது ஒரு தன்னிலை சார்ந்த பரிமாணம். இதை வெளிநிலை சார்ந்து கற்றுக்கொள்ளவும் முடியாது, வெளிநிலையைச் சார்ந்து கற்றுத் தரவும் முடியாது. எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு இதை வெளிநிலை சார்ந்து நாம் கற்றுத் தருகிறோம். நீங்கள் ஏற்கனவே என்னை ஒரு கலகக்காரக் குரவாகச் சொல்லியதைப் போல இதை மிகவும் பகுத்தறிவு சார்ந்தும் வெளிநிலை சார்ந்தும் உருவாக்கியிருக்கிறோம் ஆனால், இன்னமும் அது தன்னிலை சார்ந்த பரிமாணம்தான். ஈஷா யோகாவில் கற்றுத்தரப்படுவதைப் போல அதே விதமான பயிற்சிகளை உலகெங்கிலும் நீங்கள் பார்த்திருக்க வாய்ப்பிருக்கிறது. மக்கள் அதே விதமான பயிற்சிகளைத்தான் செய்கிறார்கள். இருந்தாலும் இவர்களுடைய அனுபவம் எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள். அதேவிதமான பயிற்சிகளைக் கொண்டு சக்தி நிலைகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால், இங்கே தன்னிலை சார்ந்த பரிமாணம் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தன்னிலை சார்ந்த பரிமாணம் திறக்கப்படவேண்டுமானால் இந்த பிராணாயாமப் பயிற்சியை மேற்கொள்பவர், தன்னை அதில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். தன்னை முழுமையாக அதில் ஈடுபடுத்தும் போது அவருடைய எல்லாத் தன்மைகளையும் மற்றவர்களுக்கு வழங்கிட முடியும். அது சிறிதுகூடத் தேவையில்லாத விடயம். யாருக்கும் அவருடைய தன்மைகளை மற்றவர்கள் மீது பதியச்செய்யும் உரிமை இல்லை. அவர் எப்படிப்பட்ட நல்லவராக, அவரைப்பற்றி நினைத்துக் கொண்டாலும் சரி அவருக்கு அது தேவையில்லாத விடயம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

## ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழ்

03

இந்த 12 ஆம் நூற்றாண்டிற்கும் 21 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் நவாப்புகளும், நாயக்க மராத்தில் மன்னர்களும் தமிழகத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் சிறந்த தமிழ் இலக்கியங்கள் அவ்வளவாகத் தோன்றாததால் **இருண்ட காலம்** எனப்பட்டது. அக்காலக் கட்டத்திலே திசைமாறிப் போய்க் கொண்டிருந்த தமிழிலக்கியப் போக்கினைக் கட்டுப்படுத்திப் பேரிலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும், புதிய இலக்கிய வகைகளையும் ஏராளமாக எழுதித் தமிழின் உயர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

"தமிழுக்கேயுரிய இலக்கண இலக்கிய பண்புகளைப் போற்றி அவற்றை நிலை பெறச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அறிவியல் கால வளர்சிக்கேற்ப புதிய இலக்கியங்கள் பலவற்றையும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் எழுதியுள்ளனர்" என்று அறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

அவ்வாறு அவர்கள் புதிதாக அறிமுகப்படுத்திய சிற்றிலக்கியங்கள் **கிஸ்ஸா-நாமா-படைப்போர்-மசலா-முனாஜாத்து** என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.

**கிஸ்ஸா** என்பதன் பொருள் கதை என்பதாகும். இவ்வகையில் 20 நூல்கள் கிடைத்துள்ளன.

**நாமா** நாமே என்கின்ற பாரசீகச் சொல்லிலிருந்து உருவாகிய கதை அல்லது நூல் அல்லது தொடர் வரலாறு எனப்பொருள் வரும். இவ்வகையிலும் 25 நூல்கள் கிடைத்துள்ளன.

**படைப்போர்** தமிழில் உள்ள

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

பரணி நூலினைப் போன்று போர்க்களக் காட்சிகளை வர்ணிப்பதாகும். இவற்றிலும் பத்திற்கும் மேற்பட்ட நூல்கள் மலர்ந்துள்ளன.

**முனாஜத்து** இந்த அரபு மொழிக்கு இரகசியம் சொல்லுதல் எனக் கருதப்படும். சிருஷ்டிகர்த்தாவையும் அவனது தலைசிறந்த அடியார்களையும் அருள் புரிய இறைஞ்சும் பாக்கள்.

**மஸலா** என்ற இலக்கிய வகை வினா-விடை முறையில் அமைந்துள்ளது.

மேற்கண்ட சிறப்பு இலக்கியங்கள் இருநூறுக்கும் மேற்பட்டவை தோன்றியுள்ளன.

எனினும் ஆரம்ப காலத்தில் இலக்கியம் படைக்க அவர்கள் கையாண்ட மொழி தமிழ் அல்ல!

ஆனால், தமிழ் தான்!

ஒரு நகைச்சுவை நடிகரின் பாணியில் நான் சொல்லும் பொழுது நகைப்பே வரும். ஆனால், யதார்த்தம் அது தான்!

அக்காலத்தில் **அரபுத்தமிழ்** என்றொரு மொழி வடிவம் அதாவது தமிழை வரி வடிவத்தில் அரபு எழுத்துக்களில் எழுதி அதனை **அரபுத் தமிழ்** என முஸ்லிம்கள் அழைத்தனர். வலமிருந்து இடமாக வாசித்தனர்.

இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, அவர்களது இறை வேதமான அல்-குர் ஆன் அரபில் இருந்ததும், சிறுவயது ஆரம்பக் கல்வியானது **மதரஸா** என்கிற அரபுப் பாடசாலைகளில் அமைந்ததுமாகும். தமிழ் பேசும் மொழியாக, அன்னைமொழியாக வழக்கிலிருந்த, தமிழை எழுதப் படிக்கத் தெரியாத பலர்இருந்தனர். ஆனால், ஒவ்வொருவரும் அரபை வாசிக்கக் கற்று இருந்தனர்.

செம்மொழி தமிழ், அரபு லிபியில் அறிமுகமாகிய பொழுது பாசமும் நேசமும் மிகுதியாகின. படித்து இன்புற ஆர்வப்பட்டனர். என்றாலும் தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புக்கு ஒத்த அரபு எழுத்துக்கள் இல்லாமையால் 28 அரபு எழுத்துக்களுடன் சில மாற்றங்களைக் கொண்ட புதிய எழுத்துக்களும் சேர்க்கப்பட்டன.

மானா மக்கீன்

அந்த 8ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டு வரையில் அரபுத்தமிழ், தமிழ் நாட்டில் மட்டுமல்ல இலங்கையிலும் குறிப்பாக தென்னிலங்கையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றது.

(தொடரும்)

# அரசாங்கம் என்ன சொன்னாலும் தமிழ் தலைவர்கள் உலகிற்கு உண்மையை எடுத்து சொல்ல வேண்டும்

## உண்மையை பேசுபவன் நான் என்றார் மனோ



(கொழும்பு)

**அரசாங்கம் எதுவும் சொல்லலாம். ஆனால், உண்மைகளை உலகிற்கு எடுத்து சொல்வதற்கு தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ் ஊடகங்களும் பின்னிற்க முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் கடத்தலுக்கு எதிராக போராடிய சாத்வீக போராளிகள் இருவர் கடத்தப்பட்டுள்ளார்கள். அந்த இருவரும் முன்னமே நடந்துள்ள கடத்தல்களை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்கள். அதுவும் சர்வதேச மனித உரிமை தின்த்திலேயே அவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். இதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என யாழ்.படைத்தரப்பு சொல்கிறது.**

கடத்தப்பட்டவர்கள் எங்கேயாவது தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அரசாங்க ஊடக பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சொல்கிறார்.

உண்மையில் இது இவ்வருட இறுதியில் இந்நாட்டில் நிகழ்த்தப்பட்டுள்ள மாபெரும் அரசாங்க சாதனை.

இலங்கையில் நிலைமை வழமைக்கு திரும்பிவிட்டது என சொல்பவர்கள்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

இருவார கால இந்திய விஜயத்தை முடித்து நாடு திரும்பிய மனோ கணேசன் தமது அலுவலகத்தில் வெள்ளியன்று நடைபெற்ற வாராந்திர கூட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது,

நெருக்கடிமிக்க வேளையில், உண்மையை பேசுபவன் தான் உண்மை தலைவன். உண்மையை துணிந்து எழுதுபவன் தான் உண்மை ஊடகவியலாளன். நாளைய வரலாறு இதை பதிவு செய்யும்.

கடந்த கால வெள்ளை வான் கடத்தல்கள் மீண்டும் ஆரம்பித்து விட்டன. அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் குறி வைக்கப்பட்டு கடத்தப்படுவது நாடு முழுக்க நடைபெறுகிறது.

இன்று பெருந்தொகையான பெரும்பான்மை இனத்தவர்களும் கடத்தப்படுகின்றார்கள். கடந்த காலங்களில் கொழும்பில் தமிழர்கள் கடத்தப்பட்டபோது அவற்றிற்கு எதிராக நாம் போராடினோம்.

எமது உறவுகள் கடத்தப்பட்ட போது அது எமக்குத்தான் வலித்தது. அன்று நாம் தனித்து நின்று போராடினோம்.

நாங்கள் பார்க்காத கடத்தல்கள், கைதுகள், கற்பழிப்புகள், படுகொலைகளா? அன்று எம்மை எதிரிகளாய் பார்த்து தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த கடத்தல்களை ஆதரித்தவர்கள் கொழும்பில் இருந்தார்கள்.

அவர்களும் இன்று எம்முடன் கைகோர்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இதை தான் காலத்தின் கோலம் என நம்முன்னோர்கள் சொல்வார்கள்.

இந்நிலையில் அரசாங்கம் மனித உரிமை தொடர்பில் புதிய நிறுவனம் ஒன்றை அமைக்க போவதாக இன்று அறிவித்துள்ளது. இது சாத்தான் வேதம் ஓதுவதற்கு சமனான வேடிக்கை ஆகும்.

இந்த மாதிரி எத்தனையோ அரசாங்க மனித உரிமை நிறுவனங்களை நாம் பார்த்து களைத்துவிட்டோம்.

இன்று எல்லா மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் நாம் எவருடனும் இணைந்து போராட தயார். ஆனால்,எம்மவர் பிரச்சினைகளையும் சேர்த்து போராட பெரும்பான்மை கட்சிகள் தயாராக வேண்டும்.

எமது வலியை புரிந்து கொள்ள முடியாதவர்களுடன் கைகுலுக்க நாம் தயாரில்லை. புதிய வருடத்தில் இந்த புதிய அடிப்படைகளில் ஒரு புதிய தேசிய அரசியல் கூட்டணியை நாம் உருவாக்குவோம்.

(அ-2)

## ஒதியமலைக்கு செல்லும் வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(வவுனியா)



வவுனியா வடக்கு நெடுங்கேணி ஊடாக பட்டிக்குடியிருப்பு மற்றும் ஒதியமலைக்கு செல் லும் வீதி நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமையினால் அவ்வீதியின் ஊடாக போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவ்வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை என தெரிவித்த பட்டிக்குடியிருப்பு மக்கள் இவ்வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் புதைந்து போவதாகவும் இது தொடர்பில் தாம் நீண்டகாலமாக பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கி வருவதாகவும் எனினும் யாரும் கவனத்தில் கொள்ளவில்லை என தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வீதியை திருத்துவதற்கு போதிய பணம் இன்மையால் பிரதேச மக்களின் உதவியுடன் வீதியில் காணப்படும் பள்ளங்களை மண்ணிட்டு நிரப்பிக் கொடுக்கவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(அ-2)

## மலேசியாவில் இலங்கையர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்

### கிங்ஸ்லி ரணவக்க தெரிவிப்பு

மலேசியாவுக்கு தொழில் நிமித்தம் சென்ற இலங்கையர் குழுவொன்று அந்த நாட்டின் சில பகுதிகளில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகல் பகுதியிலுள்ள தொழில்வாய்ப்பு முகவர் நிலையமொன்றினால் தாம் மலோசியாவுக்கு தொழிலுக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

சுற்றுலா விசா மூலம் இவர்கள் மலேசியாவுக்கு அழைத்துவரப்பட்டு நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கையில், இதுவரையில் தமக்கு அவ்வாறான எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லை எனவும் முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கிங்ஸ்லி.ரணவக்க மேலும் குறிப்பிட்டார்.

(அ-2)

## ரிசானா நபீக்கின் விவகாரத்துடன் தொடர்புடைய மூவருக்கு குற்றப்பத்திரம்

(கொழும்பு)

ரிசானா நபீக்கை சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக அனுப்பிய உப முகவர்கள் மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் எஸ்.ஏ. எம். நப்லி இக்குற்றப்பத்திரத்தை தமிழில் வாசித்து விளக்கினார்.

அதன்பின் இவ்வழக்கை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்கு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஒத்திவைத்தார்.


சாஹுல் ஹமீம் மொஹமது அப்துல் லத்தீவ், பாக்கீர் மொஹிடீன் வஜுர்டீன், கம்ஸா லெப்பே அப்துல் சலாம் ஆகியோரே குற்றம் சுமத்தப்பட்ட மூவருமாவர்.

சிறுமியொருவரை அவர் சிறுமி எனத் தெரிந்துகொண்டே போலி ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக அனுப்பியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(அ-2)

## கட்டட நிர்மாணத்துறையின் தரம் மிகவும் முக்கியமானது

### கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை மற்றும் இலங்கை தேசிய கட்டட நிர்மாண சங்கத்துக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாணத் துறையில் நவீனத்துவத்தை ஏற் படுத்துவது தொடர்பில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கட்டட நிர்மாணத் துறையின் தரம் மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நேர காலத்துடன் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு; 7 பேர் படுகாயம்

(கொழும்பு)


சிலாபம் ஆரச்சிக்கட்டுவப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராய்ச்சிகட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சிலாபம் வாகன விபத்தில் மூவர் பலி; 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ-2)





ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்ற அலுவலகம் மற்றும் சிற்றூண்டிச்சாலைக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது பழைய மாணவர் மன்ற தாய்ச்சங்கத்தின் தலைவர் மு. சிவநேசனும் கல்லூரி அதிபர் ந. தெய்வேந்திரராஜாவும் இணைந்து அடிக்கல் நாட்டி வைப்பதனையும் கலந்து கொண்ட பழைய மாணவர்கள் நிற்பதையும் அவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறுவதனையும் படங்களில் காணலாம்.

# அரசு தொழிலாளர்களை தாக்கி புதிய ஆண்டை வரவேற்கின்றது



## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தொழிலாளர்களை தாக்கியே மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இந்த ஆண்டை ஆரம்பித்துள்ளதுடன் ஜெயிக்க முடியாத வாழ்க்கைச் செலவு பந்தயத்தில் மக்களை ஈடுபடுத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சித் தலைமையகமான சிறி கொத்தவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களினால் வாழ்க்கைச் செலவு பந்தயத்தில் வெற்றியீட்ட முடியாத நிலையில் அரசாங்கம் போர்மியூலாவன் பந்தயத்தில் ஈடுபடுகின்றமை ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலகோடி ரூபா செலவில் இந்த க்ார்பந்தயத்தை அரசாங்கம் நடத்துகின்றது. ஆனால், கஷ்டப்படும் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய அரசாங்கம் இன்று விவசாயிகள் மற்றும் சிறுவியாபாரிகள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்துகின்றது.

கூடைகளிலோ அல்லது சாக்குகளிலோ மரக்கறி போக்குவரத்து செய்வதில் எங்களுக்கு பிரச்சினையில்லை. மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்பதே எமது கோரிக்கை என தெரிவித்துள்ளார். (அ-2)

# ரொஹான் தலுவத்தவின் பெயரில் மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி ரொஹான் பெயரைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் ரத்மலானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபருக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீலப் படையின் செயலாளர் எனவும் முன்னாள் இராணுவத்தளபதி ரொஹான் தலுவத்தவின் உறவினர் எனவும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு பாரிய மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இத்தாலி, கொரியா மற்றும் சைபிரஸ் உள்ளிட்ட பல நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து பலரிடம் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக பாணந்துறை பிரதேசத்தில் ஏழு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டக் கூடும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# நாடு கடந்த அரசிற்கு தாலியை அன்பளிப்பு செய்த தமிழ்த்தாய்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாம் அமர்வின் மூன்றாம் நாள் நிகழ்வின் போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்குப் பங்களிப்பு செய்யும் முகமாக பாராளுமன்ற சபையில் ஈழத்தாய் தனது தாலிக்கொடியைக் கழற்றி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவர் நாடு கடந்த அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயப்பிரகாஸ் ஜெயலிங்கத்தின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பல அமைச்சர்களும் மக்களும் தங்கள் பங்களிப்புக்களை நகைகள் மூலமாகவும் பணமாகவும் செய்தனர்.

தனது தாலிக் கொடியைக் கழற்றிக் கொடுத்து முன்னுதாரணமாக விளங்கிய தமிழ்த் தாய்க்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமரும் பேராளர்களும் கண்ணீர் மல்க தமதுநன்றியைத் தெரிவித்துள்ளனர். (அ-2)

# 2011.12 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1271-குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை ***யுவான்*** என மாற்றிக் கொண்டான். யுவான் வம்சம் ஆரம்பமானது.

★ 1505-பெல்ஜிய மன்னன் ஜோன் IX வான் ஹோர்ன் தூக்கிலிடப்பட்டான்.

★ 1642-ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.

★ 1787-நியூஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1911-சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.

★ 1926-துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★ 1935-இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1941-ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுநர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெடுத்தது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் விமானப் படை விமானங்கள் சீனாவின் ஹன்கோவ் நகரில் ஜப்பானிய இராணுவத் தளத்தின் மீது குண்டுகளை வீசின.

★ 1961-இந்தோனேசியா டச்சு நியூகினியை ஆக்கிரமித்தது.

★ 1966-சனி கோளின் சந்திரன் எப்பிமேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1973-சோவியத் விண்கலம் சோயூஸ் 13 வலன்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1987-லரீ வோல் தனது பேர்ள் கணனி நிரலாக்க மொழியை வெளியிட்டார்.

★ 1997-எச்.டி.எம்.எல்.4.0 வெளியிடப்பட்டது.

★ 1999-கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தனது வலது கண்ணை இழந்தார்.

★ 2005-சென்னையில் வெள்ள நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட நெருக்கடியில் 42 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1856-ஜெ.ஜெதோம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கில இயற்பியலாளர் (இ.1940)

★ 1863-பிரான்ஸ் பேர்டினண்ட், அவுஸ்திரேலியாவின் முடிக்குரிய இளவரசர் (இ.1914)

★ 1878-ஜோசப் ஸ்டாலின், சோவியத் ஜனாதிபதி (இ.1953)

★ 1932-நா. பார்த்தசாரதி, தமிழ் எழுத்தாளர் (இ.1987)

★ 1946-நெல்லை க.பேரன், ஈழத்து எழுத்தாளர் (இ.1991)

★ 1948-ஸ்டீவன் ஸ்பில்பேர்க், அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்

**இறப்புக்கள்**

★ 1843-தோமஸ் கிரஹாம், லினடொக் பிரபு, இந்தியாவுக்கான பிரித்தானிய வைசிராய் (பி.1748)

**சிறப்பு நாள்**

★ நைஜர் - குடியரசு தினம் (1958)



★ 1822- தமிழ் உரை நடையின் முன்னோடியும் ஈழத்தின் ஆன்மீகவாதியுமான ஆறுமுகநாவலரின் பிறந்த தினம். (இ.1879)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சிறையிருக்கும் சீதைகள்

கல்யாணச் சந்தையிலே
மாப்பிள்ளைக்கு விலை அதிகம்
பெண்ணைப் பெற்றோர் நெஞ்சினிலே
துயரங்கள் மிக அதிகம்

சிறையிருக்கும் சீதைகளோ
நம் நாட்டில் தாராளம்
சிறை மீட்க சீதனங்கள்
கேட்கின்றார் ஏராளம்

சீதனத்தின் கொடுமையினால்
சீரழியும் பெண்ணினங்கள்
வாழ்வதனில் வசந்தமின்றி
வாடுகின்றார் காலமெல்லாம்

சீதைகளின் வாழ்வினிலே
சீதனங்கள் தொடர்கதையா?
மாறிவரும் காலமதில்– இது
மாறாத துயர்கதையா?

பொலிகை உஷா

### இராவணனாக

வீட்டிலிருந்து
வெளியே நானும்
இராமனாகத்தான்
வந்தேன்
வீதியில் திரியும்
சீதைகளைக் கண்டதும்
மயங்கி தயங்கி
பல கலைகள் முளைக்கவே
இராவணனாகி
அசோகவனத்தில் அவளை
சிறையிடப்போய்
சோகவனத்தில் இன்று
சிறை கிடக்கின்றேன்

ஆ.மோஸ்
கொழும்புத்துறை

### நீ...

மௌனமான நேரம் என் மனதில்
சிறுபாரம் உன் மனதில்
என்ன நினைத்தாய் என்
மனதில் உன்னை
விதைத்தாய்
விதைத்துவிட்டு நீ விளங்க
முடியாத புதிராய்
என் வாழ்வில் விடுகதையாக
விடுபடாமல் என்றும்
நீ என் தொடர்கதையாய்
தொடர்ந்திடவேணும்

கங்கா.பா
வண்ணார்பண்ணை

### அவரவர் பார்வையில்

#### பதில் கூறு

சங்குநாதத்தில்
நான் எழுதும்
கவிக்கு பதில் கவி
எழுதிவிடு
என்னவனே உன்னை
நானறிய

எம்.தியா
சங்கானை

#### நம்பிக்கை

நம்பிக்கை எனும் நார் எடுத்து
தும்பிக்கையானின் துணை கொண்டு
நாளும் நல்லதையே தொடங்கு
நம்பிக்கையுடன்...

#### வறுமை

பொருளீட்ட வேண்டுமென்று
வறுமையிலும்
இளைய கவி பாடுகின்றேன்
அப்போதும்
பணம் உறக்கத்திலுள்ளது

#### தவிப்பு

என் நிலையை மறந்து
உன் வரவை நினைத்து
ஏங்கி நிற்கின்றேன்
நாட்களை எண்ணி

பா.மதனபாரதி
அல்வாய்

### கழைவு

மனிதர்களே...ஆடைகளுக்கு
துரோகம் செய்யாதீர்கள்
நீங்கள் குறைத்துக் கொள்ளவேண்டியது
ஆடைகளை அல்ல
அலங்காரம் செய்யப்பட்டிருக்கும்
நிர்வாணங்களை
ஆடைகளில் கஞ்சல்தன்மை செய்ததனால்
நாகரிகக் குழந்தைகள்
கொல்லப்பட்டிருக்கிறது
எமக்கென்றொரு ஆடை நாகரிகம்
இருக்கிறது
ஆனால் ஆடையில்லாமல்
இருப்பதே நாகரிகமாகிவிட்டது
நம் பண்பாடு வன்முறைக்குள்ளாவது
நவீன ஆதாம் ஏவாள்களின்
நடைமுறையில்தான்
ஒய் நாகரிக மனிதனே
சலவை செய்யப்படவேண்டியது
ஆடைகளை அல்ல
உங்கள் ஆபாசங்களையே

எம்.நேதா, நெடுந்தீவு

### இமயம் தொட...

மாரியில் வெட்டப்படும்
மரங்கள் துளிர்விட்டு
கோடையில்தான் விருட்சமாகிறது
பாலையில் அலைந்திடும்
ஒட்டகங்கள் நீரதனை
சேமித்து தாகத்தை தீர்க்கிறது
மாரியும் கோடையும்
காணும் மனிதா
இயற்கையுடன் முரண்படுவதை
இப்பூமியில் எதைக்கண்டாய்


மாவை நா.கஜேந்திரன்

### அடம்பன் கொடி

விசாலித்துப் பரவுகின்ற
அடம்பன் கொடிகளுக்கான
விதைகள்...
விசிறப்பட்ட மூலம்
வெளித்தெரியமாட்டாது
பரவிப்படரும் திறம்
பெரிதெனினும்...
தரவைகளைத்
தனதாக்கிக் கொள்ளும்
இவை திரளும்போதுதான்...
மிடுக்குமிழ்கின்றன
உடுச்சிரிப்பின் மெல்லொலியில்...
ஊர்வனவாய் தெரியும்போது
எம் உளங்குறைந்துபோம்
நிலம்படரும் நிஜக்கொடியே!
நிழல்வார்க்கும் திறமுனக்கு
இல்லையென்று போனாலும்
வலுக்குறையாதுள்ளாய்...!

கவிஞர். சு.க.சிந்துதாசன்

## மௌனத்தின் தேடல் – 101



### விதியின் விந்தை

வியத்தகு நம் நாட்டின்
விஞ்ஞான விந்தையினால்
விரைந்து நடந்திட
வீதியில் வழியின்றி
விதமாய் வாகனங்கள்
வீதியை அறிந்திடவே
விலக்கி வைக்கிறது

இ.ரிஷிதா
நயினாதீவு-06

### வலிகளுடன்

வஞ்சம் தீர்க்கும் நினைவுதான்
உந்தனுக்கு...
நெஞ்சில் நிறைந்திருக்கென
வாய்விட்டுக்கூறுபவர்...
தன்நிலை மாற்றாது
பழிதீர்க்கும் நினைவோடு
பயணிப்பது...
வேதனைமேல் வேதனைதான்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### வினைப்பயன்

திசைமாறிய பயணத்தால்
உயிருக்கு முற்றுப்புள்ளியாக
மதங்கொண்ட யானையே
குறிவைத்து விட்டதால்
முன்வினைப்பயன் இன்று
என் வாழ்விலே..

அ.துசாந்தினி
கொம்மாந்தறை

### வேதனை

மனிதனுக்கு வேதனை
வீதிக்குச் சோதனை
விபரீத சாதனை
மதம்கொண்ட யானைக்கா?
அணையாத தீபத்தை துணையாக்கு
இணையாத பலத்தோடு முன்னேறு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### முடிவு

பிள்ளையார் அப்பனே
மனிதனை நீ அழிக்க
எண்ணம் கொண்டாயோ -இல்லை
அவலப்பட்டு வந்த மனிதனுக்கு
உதவிட எண்ணம் கொண்டாயோ
எதுவானாலும் இதன் முடிவு
உன் எண்ணத்தில்தான் அப்பனே

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்.

### பழி

மனிதன் உன் வீட்டை அழித்ததனால்
நீ வீதிக்கு வந்து விட்டாய்
வீட்டை அவிழ்த்தவன்
உன் எதிரே வந்ததனால்
பழி தீர்க்க எண்ணம் கொண்டு விட்டாய்
பந்தாட நினைக்காதே மனிதனை
பாவம் அவளை விட்டுவிடு

திருமதி.அ.மேரி அல்போன்சா
குருநகர்

### வெற்றி உனதே

ஆனையே பயப்படாதே மக்கள்
ஆணை உன் பக்கமே இனி
சேனை திரண்டாலும் உன் பிளிறல்
வானைப் பறிக்கப் பின்வாங்கும்
தடை ஏதுவரினும் தகர்த்து வீர
நடைபோடு வெற்றி உனதே

துரை
தென்மட்டுவில்.

### அடிசறுக்கும்

அதிக பலத்தால்
அதிகார பலம் கொண்டு
அட்டகாசம் புரிந்திட
துணிந்திடுதே...!
அடிசறுக்கும்
என்பதை அறியாமலே!

ஆர்.பிராத்மி
அராலி

### முடியும்

மாண்டு போன வாகனத்தை
மீட்டெடுக்க மிருகத்தால் முடியும்
தமிழர்களின் துயர் தீர்க்க
சர்வதேசத்தால் தான் முடியும்

அ.அன்பு
வரணி

### காலம் வரும்

ஆனைக்கொரு காலம்
பூனைக்கொரு காலம் என்பார்கள்
உங்களுடன் காருக்கும்
ஒரு காலம் வந்துவிட்டதே மாமா
நாங்களும் யானையின் பிடியில்
நீங்களும் யானையின் கையில்

உ.உஷானி

### சீற்றம்

நெறி கெட்டு பொறிவைத்து
கரி பிடிக்க வந்த பாவி
சேயைக் கவர்ந்ததால்
சினங்கொண்டு
பந்தாட நினைக்கின்றாயோ
பாவம் விட்டுவிடு
பண்பற்ற மானிடன்
தப்பித்துக் கொள்ளட்டும்

வி.கே.அமுதஸ்ரீ
இமையாணன்

### படிப்பினை

ஐந்தறிவு யானைக்குள்ள
சூழற்பற்றை
ஆறறிவு மனிதா நீ
தொலைத்ததேனோ
வலிமையதன் அர்த்தம்
புரிந்திடுவாய்
நலிவுறாது நம் சூழல்
காத்திடுவாய்

புலோலியூர்
வேல்நந்தன்

### தன்வினை தன்னைச்சுடும்

மதம்கொண்ட யானையே -நீ
மதம்பிடித்து செய்யும்
சமூக விரோதங்கள்
மதமற்ற பின்பு
உன்னை
நெருடக் காண்பாய்

ஒட்டுவெளியூர்
வி.ரி.நடராசன்

### இயற்கையின் எதிர்ப்பு

யானைக்கே பிடிக்கவில்லை–நீ
கோடிகோடியாய் சம்பாதிக்க
கஞ்சாவைக் காட்டில் வளர்ப்பது

கமில்
கொழும்புத்துறை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 102

### அன்பு வாசகர்களே !



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 23.12.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# யாழ்ப்பாண நகரில் காகில்ஸ் நிறுவனம்

# ரூ.500 மில்லியனில் வர்த்தகதொகுதி அமைப்பு

CARGILLS(CEYLON)PLC

காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி நிறுவனமானது 500 மில்லி யன் (50 கோடி) ரூபாய் முதலீட்டில் புதிய வர்த்தக தொகுதி ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் நட வடிக்கையை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிரே அமைக்கப்படும் இக் கட்டதொகுதியின் கட்டுமான வேலைகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதற்கான கட்டுமான வேலைகள் நவலோகா கட்டுமான நிறுவனத்திடம் வழங்கப் பட்டுள்ளது.

இப்பணிகள் 16 மாதத்தில் முடிப் பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நான்கு மாடிகளைக் கொண்ட தாக அமையவுள்ள இவ்வர்த்தக தொகுதியில், புதிய சில்லறை வணிக வளாகம், வங்கி, உணவு விடுதி, 3 சினிமா திரையரங்கு மற்றும் கார் தரிப்பிட வசதி கொண்டதாக அமைக் கப்படுகிறது என காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே காகில்ஸ் விற் பனை நிலையங்கள் மானிப்பாய் , யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் அண்மையில் ஆரம் பிக்கப்பட்டு சிறிப்பான முறையில் செயற்பட்டு வருகிறது.

# பங்குச்சந்தைக் கருத்தரங்கு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் ‘பங்குச் சந்தை முதலீட்டு நடை முறைகள்’ எனும் தலைப்பில் கருத் தரங்கு ஒன்றினை நாளை திங்கட் கிழமை மாலை 3.30 மணிக்கு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளை யில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளையா னது பாடசாலை மாணவர்களுக்கு நிதிச் சந்தை தொடர்பான விளக்க மளிக்கும் நோக்குடன் தொடர் விளக்கமளிக்கும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள விரும்பும் பாட சாலை அதிபர்கள் தம்மை தொடர்பு கொண்டால் தெளிவூட்டல் கருத் தரங்குகளை தங்கள் பாடசாலை களுக்கே வந்து மேற்கொள்வதுடன் மாணவர்களுக்கு நிதிச்சந்தை நடைமுறைகள் அடங்கிய கையேடு களும் இலவசமாக வழங்கப்படும் எனவும் கொழும்பு பங்குப் பரிவர்த் தனையின் யாழ்.கிளை முகாமை யாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல் களை 0212221455 என்ற தொலை பேசி மூலமும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

# குத்தகை வசதிக்கு புதியதொரு பரிமாணம்

## செலான் ஸ்மார்ட் லீஸ்


Mr. Kapila Ariyaratne

செலான் வங்கியானது இலங் கை முழுவதிலும் உள்ள தனது தற்போதைய வாடிக்கையாளர்கள் மற்றும் எதிர்காலத்தில் வாடிக்கை யாளர்களாக இணைந்து கொள்ள வுள்ளவர்களுக்காக அண்மை யில் செலான் ஸ்மார்ட் லீசிங் (Seylan Smart Lease) வசதியை அறி முகப்படுத்தியதன் மூலம் தனது சேவைகளின் தொடரினை மேலும் விஸ்தரித்துள்ளது.

செலான் ஸ்மார்ட் லீசிங் என்ற நாமம் மிகவும் சிறப்பாக எடுத்துரைப் பதைப் போலவே இந்த குத்தகை வசதியானது வாடகையை செலுத் தும் விடயத்தில் முழுமையான நெகிழ் வுத்தன்மைகளைக் கொண்ட தெரிவு வசதிகளை வழங்கும் மிக நேர்த்தியான ஒருசேவையாகும்.

அதிக வருமானம் (போனஸ் கொடுப்பனவுகள், பருவ கால வியா பாரம் மற்றும் வருமானம் போன் றவை கிடைக்கப்பெறும் காலங்க ளில் நியம, மாதாந்த வாடகையை விடவும் அதிகமான தொகையினை செலுத்துவதற்கான தெரிவு ஒன்றினை இது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

அதிகளவு வருமானம் உழைக் கும் மாதங்களில் அதிக தொகையை செலுத்துவதன் விளைவாக எஞ்சி யுள்ள மீளச் செலுத்தும் காலப் பகுதிக்காக செலுத்துவதற்கு மீதம் இருக்கும் வாடகைத் தொகையா னது மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகைக்கு அமைய குறைவடை கின்றது. அதாவது சம்பந்தப்பட்ட வருடத்திற்குள் குத்தகையின் மிகு திக் காலப் பகுதிக்காக குறைந்தள விலான வாடகையை ஒருவர் செலு த்த முடியும் என்பதை இது மிகச் சிறப்பாக தெளிவுபடுத்துகின்றது.

செலான் லீஸ் ஆனது தனி நபர் கள் (தொழில்வாண்மையாளர்கள்) , நிறைவேற்று அதிகாரிகள், பங்கா ளித்துவ முயற்சியாளர்கள் போன் றோர்) சிறிய நடுத்தர முயற்சிகள் (ஏக உரிமையாளர்கள், பங்காளித் துவ முயற்சியாளர்கள் போன்றோர்) கூட்டாண்மை நிறுவனங்கள் மற் றும் சௌகரியமான வடிவில் அமை ந்த இந்த குத்தகை வசதியை தம்ம ளவில் பயன்படுத்தி வாழ்க்கையை இலகுவாக்கிக் கொள்ள விரும்பும் ஏனைய தரப்பினரை இலக்காகக் கொண்டுள்ளது.

மோட்டார் கார்கள், வான்கள், ட்ரக் வண்டிகள், இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள், மோட்டார் சைக்கிள் செலான் ஸ்மார்ட் லீசிங்கில் இயந் திர சாதனங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக செலான் ஸ்மார்ட் லீஸ் வசதியினை பயன் படுத்திக் கொள்ளலாம்.

நாடெங்கிலும் உள்ள 131 செலான் வங்கிக் கிளைகளிலும் இச்சேவை யப் பெற்றுக் கொள்ளலாம் என செலான் வங்கியின் பொது முகாமை யாளர் /பிரதம நிறைவேற்று அதிகா ரியான கபில ஆரியரத்தன தெரி வித்தார்.





கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரபல பல் தேசியக் கம்பனியான செவ்ரான் லூப்ரிகன்ஸ் இன் தலைவர் டேனி ரோடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தை படத்தில் காணலாம்.

# ஏசியன் புலமைப்பரிசில் பரீட்சை இன்று

CSC-ASIAN COMPUTER EDUCATION

சி.எஸ்.சி-ஏசியன் கல்வி நிறு வகம் தகவல்தொழில்நுட்பம், மல்ரிமீடியா மற்றும் ஆங்கில பயிற் சிக்கான புலமைப்பரிசில் திட்டத்தை வழங்கும் நோக்குடன் புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் நாட ளாவிய ரீதியில் உள்ள தமது கிளை களிலும் நடத்தவுள்ளது.

ஆண்டுக்கொருமுறை நடை பெறும் இப் புலமைப்பரிசில் பரீட் சையில் தோற்றி 40%;50%; 60% மற்றும் 75% புலமைப்பரிசிலைப் பெறமுடியும் ஏசியன் நிறுவனத்தி னர் அறிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.29 | 110.91 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.99 | 175.94 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 150.50 | 154.58 |
| சுவிஸ் பிராங் | 124.44 | 128.49 |
| கனேடிய டொலர் | 110.24 | 113.57 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.85 | 115.53 |
| சிங்கப்பூர் டொலர் | 87.52 | 90.03 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.32 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.97 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6990.33 | 6870.92 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6286.93 | 6209.24 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 10,206.33 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ரீஸ் அக்ரோ (6.40), சதோசா மோர்ட்டாஸ் (405.20), றீஜின்ஸ்(215.00), முல்லோர்ஸ்(3.60), எஸ்.எம்.பி.லீசிங்(W)(1.50)

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** கொமர்ஷல் வங்கி(X) (80.00), கொமர்ஷல் வங்கி (117.10), புளூ டைமன்ஸ்(X)(4.40), எச்ஏவி பூட்(58.70), புளூ டைமன்ஸ்(9.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## ஆசியாவில் கோடீஸ்வரர்கள் அதிகரிப்பு

2015-ம் ஆண்டில் ஆசியக் கண்டத்தில் உள்ள நாடுகளில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 25 இலட்சத்திற்கும் மேல் உயரக் கூடும் என ஆய்வு ஒன்று தெரி வித்துள்ளது.

சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதால் இந்நாடுகளின் மக்களின் சேமிப்பு மற்றும் வாழ்க் கைத் தரம் உயர்ந்துள்ளது.


இதனால் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அய்வு தெரிவித்துள்ளது.

இந்தியா, சீனா போன்ற நாடு கள் மக்கள் தொகை அதிகளவில் இருந்த போதிலும் வயது வந்தவர் களின் தனிநபரின் சொத்துகள் எனக் கணக்கிடும் போது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது.

அதேசமயம் சிங்கப்பூர், ஹொங் காங் நாடுகளின் இதன் விகிதம் அதிகரித்துள்ளது.

மேலும் கோடீஸ்வரர்களின் எண்ணிகை அதிகரிப்பில் சீனா வின் பங்களிப்பு அதிகமாக இருக் கும் எனவும் ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

# நோக்கியா இடத்தைப் பிடித்தது சாம்சங்




செல்போன் துறையில் முன் னணி நிறுவனங்களாக திகழும் நோக்கியா, சாம்சங் நிறுவனங் களிடையே முதலிடத்தைப் பிடிப் பது யார் என்ற போட்டியில் சாம்சங் நிறுவனம் முன்னேறி வருவதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் 2010/11 ஆண்டில் சாம் சங் நிறுவனம் 21.7% அதிகரித்து 5 ஆயிரத்து 720 கோடி இந்திய ரூபாயாக உள்ளது. அதேசமயம் அதற்கு முந்திய ஆண்டில் இதன் இலாப விகிதம் 4 ஆயிரத்து 700 கோடியாகும.

நோக்கியாவின் வருமானம் 2010/11இல் 12 ஆயிரத்து 929 கோடியாகும். அதற்கு முந்தைய ஆண்டில் இந் நிறுவனத்தின் வரு மா ணம் 12 ஆயிரத்து 900 கோடியாகும்.

. ஜனவரி முதல் ஜூலை வரை யிலான நடப்பு ஆண்டில் நோக்கி யா நிறுவனம் 37.5 சதவீதம் சந்தைப் பிடித்துள்ளது. முந்தைய ஆண்டில் இவை 49.3 சதவித அளவைக் கொண்டிருந்தது.

சாம்சங் நிறுவனம் இந்த ஆண்டில் முதல் 7 மாதங்களில் 28 % அள விற்கு சந்தையை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் இதேகால கட் டத்தில் இவை 20.1 சதவீதத்தையே கொண்டிருந்தது.

கடந்த 2007/08 ஆண்டில் சாம்சங் நிறுவனம் மாதம் ஒன் றுக்கு 2 லட்சம் செல்போன்களை விற்பனை செய்தது.

நோக்கியா நிறுவனம் இந்த ஆண்டுகளில் மாதம் ஒன்றுக்கு 4 மில்லியன் போன்களை விற் பனை செய்தது குறிப்பிடத்தக்கது.

## 38 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்

2011ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டு பயணிகள் எண்ணிக்கை 38 இலட்சத்து 19 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 2010ஆம் ஆண்டு இதே காலப் பகுதியில் வருகை தந்த சுற் றுலாப் பயணிகளை விட 10.20 சதவீதம் அதிகமாகும். இந்தியா விற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 0.5 சதவீதம் என்ற அளவில்தான் உள் ளது. இதைவரும் 12-வது ஐந்தா ண்டு திட்ட காலத்திற்குள் ஒரு சத வீதமாக உயர்த்த இந்திய சுற்று லாத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

# சந்திரிகா கொலை முயற்சி சந்தேகநபர் சுயவிருப்புடன் தகவல் வழங்கினார்

## கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்குவைத்து கடந்த 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் சுய விருப்பின் பேரிலேயே பொலிஸாரிடம் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்தநபர் கூறிய கருத்துக்கள் சுய விருப்பின் பேரில் வழங்கப்பட்டதா என உறுதி செய்ய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வராவெள முன்னிலையில் விவாதம் இடம் பெற்றது.

பொலிஸார் தன்னை சித்திரவதைக்கு உட்படுத்தி குற்றத்தை ஒப்புக்கொள்ள வைத்ததாக வழக்கின் பிரதான சந்தேகநபரான வேலாயுதம் வரதராஜா நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரை விசாரணை செய்த பொலிஸ், அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற வைத்திய அதிகாரிகளிடம் சாட்சியங்கள் பெறப்பட்டதன் பின் சந்தேகநபர் சுயவிருப்பின் பேரிலேயே பொலிஸாரிடம் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (அ-2)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு தமிழரின் ஒரு அங்குலம் காணியேனும் அபகரிக்கப்படாது



## அமைச்சர் ரிசாட் பதியுதீன்

முஸ்லிம்களை மீள்குடியேற்றும்போது தமிழ்மக்களுக்குச் சொந்தமான காணிகளில் ஒரு அங்குலத்தையேனும் எடுப்பதற்குத் துணைபோகமாட்டேன் என்று தெரிவித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் குரோதத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மீள்குடியேற்ற அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ரிசாட் இங்கு மேலும் கூறுகையில்,

மன்னார் மற்றும் வவுனியா சௌபால புளியங்குளம் போன்ற கிராமங்களில் ஏற்கனவே வாழ்ந்த முஸ்லிம்கள் அங்கு மீள்குடியேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று தான் நாம் கேட்கின்றோம். எனினும் அங்கிருந்த தமிழ்மக்களை வெளியேற்றுமாறு நான் ஒருபோதும் கூறியதில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களை மோதவிட்டு அரசியல் இலாபம் தேடுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தப்பிரச்சினையும் வந்துவிடக்கூடாது. முஸ்லிம்களுடன் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுவதால் எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது.

மேலும் முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அங்கு தமிழருக்குச் சொந்தமான ஒரு அங்குலம் நிலத்தையேனும் எடுப்பதற்கு நான் துணைபோகமாட்டேன். பிரச்சினைகள் இருப்பின் அது பேசித் தீர்க்கப்படவேண்டும். (அ-2)

# 2006 முதல் இவ்வாண்டு வரையில் டெங்கினால் 851 பேர் உயிரிழப்பு

## 118,108 பேர் பாதிப்பு

டெங்குநுளம்புகளின் தாக்கத்தின் காரணமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2011 நவம்பர் வரையிலான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 108 பேர் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை 851 பேர் மரணித்திருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் சபையில் தகவல் வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி.அநுரகுமார திசாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தகவல் வழங்கினார்.

அவர் மேலும் கூறுகையில்,

டெங்கு நுளம்புகளின் தாக்கத்தின் காரணமாக 2006 ஆம் ஆண்டில் ஆயிரத்து 960 பேர் பாதிக்கப்பட்டதுடன் 46 பேர் பலியாகியிருந்தனர். 2007 ஆம்ஆண்டில் 7 ஆயிரத்து 332 பேர் பாதிக்கப்பட்ட அதேவேளை 28 பேர் பலியாகினர். 2008 இல் 6 ஆயிரத்து 607 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 27 பேர் பலியாகினர். 2009 ஆம் அண்டு டெங்கு நுளம்பால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 95 ஆகும். இவர்களில் 346 பேர் பலியாகினர். அதேபோன்று 2010ஆம் ஆண்டில் 34 ஆயிரத்து 188பேர் பாதிக்கப்பட்டு அதில் 241பேர் இறந்தனர். 2011 இல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 22 ஆயிரத்து 926 பேர் பாதிக்கப்பட்டதுடன் 163 பேர் பலியாகியுள்ளனர்.

இதன்படி 2006 முதல் 2011 நவம்பர் வரையில் டெங்கினால் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 108 பேர் பாதிக்கப்பட்டு 851 பேர் இறந்துள்ளனர்.

டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக கியூபாவில் இருந்து 10 ஆயிரம் அலகுகள் பக்றீரியா இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. எனினும் இந்த பக்றீரியா திட்டம் எதிர்பார்த்தளவில் வெற்றியளிக்கவில்லை. இந்த பக்றீரியாக்கள் இரண்டு வாரங்களில் செயலிழக்கும் தன்மை கொண்டவையாகும்.

எனினும் இவ்வாறு கொண்டு வரப்பட்ட பக்றீரியாக்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டன. இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கு இவை வழங்கப்பட்டன. இதன்மூலம் கிடைத்த தகவலின் நிமித்தம் டெங்கு பரவுதல் மற்றும் மரணித்தல் ஆகியவற்றை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

எத்தனை முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாக இருக்கின்றது.

வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் டெங்கு நுளம்புகளால் ஏற்படுகின்ற மரணங்கள் இலங்கையை விட மிக அதிகமாகும். உதாரணத்துக்கு டில்லியை எடுத்துக் கொண்டால் அங்கு டெங்கு நுளம்புகளால் நாளொன்றுக்கு 150 பேர் வீதத்தில் மரணிக்கின்றனர். எனினும் இலங்கையில் அவ்வாறு இல்லை. அதனை நாம் கட்டுப்படுத்தியிருக்கிறோம். (அ-2)

# இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் நாடு திரும்புவர்

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 10 இலங்கை மீனவர்கள் நாட்டை வந்தடையவுள்ளனர். இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினால் இவர்கள் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டது.

கடந்த 22 ஆம் திகதி தென்மாகாணத்தில் வீசிய கடும் காற்றின்போதே இந்த மீனவர்கள் பயணித்த படகுகள் காணாமற் போயிருந்ததுடன் அவர்கள் தமிழக கடல் எல்லைக்குள் பிரவேசித்திருந்தனர்.

தமிழக கரையோரப் பாதுகாப்பு பிரிவினால் இவர்கள் காப்பாற்றப்பட்டதுடன் கடற்றொழில் அமைச்சின் தலையீட்டினால் இந்த மீனவர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)


நத்தார் பண்டிகையை முன்னிட்டு... அதிரடி விலைக்கழிவில்

LAPTOP COMPUTERS
DESKTOP COMPUTERS

**HP - 430**
- Intel Core i5 2430 2.4 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam Wi-Fi
- Dos /1 Year Warranty

Price :- Rs. 66,200/=

**HP - 630**
- Intel Core i3 2330 2.2 GHz
- 2GB DDR-III
- 320 GB SATA HDD
- DVD Writer
- 15.6" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos /1 Year Warranty

Price :- Rs. 62,000/=

**HP - Probook4530s**
- Intel Core i3 M380 2.53 GHz
- 4GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer / Finger Print
- 15.6" LED wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1 Year Warrnty

Price :- Rs. 69,400/=

**Gigabyte - E1425a**
- Intel Core i5 480 2.67 GHz
- 3GB DDRIII / 512MBVGA
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 2 Years Warrnty

Price :- Rs. 62,500/=

**Acer - Aspire 4749**
- Intel Dual Core B950 2.1 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 1 Year Warrnty

Price :- Rs. 49,700/=

**Acer - Aspire 5750**
- Intel Core i3 2310 2.1 GHz
- 3GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer
- 15.6" LED wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1 Year Warrnty

Price :- Rs. 63,300/=

| | |
|---|---|
| Intel Dual Core 3.0 GHz | M/Board - Biostar G41 |
| 2GB DDR-III Kingston | HDD 500GB Samsung |
| Casing Tower ATX | DVD Writer Samsung |
| Monitor LED 15.6" Viewsonic | USB Keyboard Board |
| USB Optical Mouse with pad | M/M HI-FI Stero Speaker |

System - I @ 41,750/=

| | |
|---|---|
| Intel Core i3 3.0GHz | M/ Board-Biostar H61 |
| 2 GB DDR-III Kingston | HDD 500GB Samsung |
| Casing Tower ATX | DVD Writer Samsung |
| Monitor LED 19" Viewsonic | USB Keyboard Board |
| USB Optical Mouse with pad | M/M HI-FI Stero Speaker |

System - II @ 51,750/=

★ 1- 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!
★ கையிருப்பில் உள்ளவரை மட்டுமே...

Free:- Headphone w/mic, M/M Speaker, Mouse

Note:- First 25 Customers Only

SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்....
T/P:- 021-5100105, 0777-874705, Fax:- 021222-4500

Our Services
Sales, Repair & Maintenance, Software Developments, all type of Security Systems and etc.....

Kaspersky 2012

@ 1,400/=

Windows 7

Windows 7 Starter @ 6,200/=

Dongle-Multi

@ 4,000/=

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம்

## சட்டபீட பீடாதிபதி கலாநிதி பிரதீப தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை விரைவில் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கென பல்வேறு பிரிவுகளையும் இணைத்து ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பீடாதிபதி கலாநிதி பிரதீப மஹனாமஹேவா தெரிவிக்கின்றார்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சிலவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்ட அவர் பாராளுமன்றத்தினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியுமெனக் கூறினார்.

அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இதனை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டுமெனவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஒன்றிரண்டு சிபாரிசுகள் துரிதகதியில் செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் ஆணைக்குழுக்கள் பலவும் சிபாரிசுகளை முன்வைக்கின்ற போதிலும் அவற்றினை செயற்படுத்துவதற்கு தவறியுள்ளதாக கலாநிதி பிரதீப மஹனாமஹேவா குறிப்பிடுகின்றார். இந்த சிபாரிசுகளை செயற்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தினால் இலங்கை மீது சுமத்தப்படும் அநாவசிய குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாக்க முடியுமென அவர் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமது நாட்டிலேயே ஆணைக்குழு அமைப்பது பொருத்தமற்றது என கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனாலும் தற்போதும் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் அதனை உறுதிப்படுத்த சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படல் அவசியமானதெனத் தெரிவித்தார்.

இதேவேளை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை செயற்படுத்தும் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிடும் போது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிட்டார். (அ-2)

## பாராளுமன்ற ஒழுக்கத்தை பேண குழு நியமிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஒழுக்கம், கௌரவம் என்பவற்றை பாதுகாப்பதற்கான குழு ஒன்றினை சபாநாயகர் நியமித்துள்ளார். இதன் தலைவராக சிரேஷ்ட அமைச்சரான டியூ குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் ஆறு உறுப்பினர்கள் இக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் நடந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகர் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் ஒருவர் எந்தவொரு அரசியல் கட்சியினதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியை வகிப்பாராயின் அது பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கு பாதிப்பாகும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (அ)

# துணுக்காய் உப தபாலகம் அமைக்க கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய் உபதபாலகத்திற்கு காணி ஒதுக்கப்பட்டும் நிரந்தர கட்டடம் அமைக்கப்படாமையால் தனியார் வீடுகளில் இடப்பற்றாக்குறையுடன் தபாலகம் இயங்குகின்ற நிலை காணப்படுகின்றது.

துணுக்காய் உப தபாலகமானது ஆலங்குளம், துணுக்காய் , கல்விளான், வேட்டையடைப்பு, உயிலங்குளம், கொக்காவில் வீதி உட்பட பல கிராமங்களில் வசிக்கும் மக்களின் தபால் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றது.

யுத்தத்திற்கு முன்னரும் மீள் குடியேற்றத்தின் பின்னரும் நிரந்தரக் கட்டடம் இன்றி மாறிமாறி தனியார் வீடுகளில் இயங்கி வருகின்றது.

தற்பொழுது துணிக்காயில் புதிதாக அமைக்கப்படும் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் மேற்குறித்த உபதபாலகத்திற்கென காணி ஒதுக்கப்பட்டது. ஆனாலும் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவில்லை. எனவே, உரிய தரப்பினர் மேற்படி உபதபாலகத்திற்கு நிரந்தர கட்டடத்தை அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)



கொழும்புத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் தெற்கு கொள்கலன் நிலையம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படுவதையும் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் அபே குணவர்த்தன, இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிகர் உட்பட பலர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவுமில்லை

## விஜயகலா எம்.பி.சபையில் தெரிவிப்பு

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பல கோயில்கள் இருளில் மூழ்கியுள்ளன. கோயில்களில் விளக்கேற்றுவதற்கு இடமளிக்க வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றப்படும். நாடும் ஒளிரும் என்று ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட எம்.பி. திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீள்குடியேற்ற அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் அல்லற்பட்ட மக்கள் தற்போது மீள்குடியேற்றமென்ற பெயரில் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு இன்னமும் பூரணமாக அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

வவுனியா மெனிக்பாம் முகாமில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இன்னமும் தங்கியுள்ளனர். மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டங்கள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ள போதிலும் அந்தப் பணிகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை. இதே போல்தான் குடாநாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்கத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

மீள்குடியேறியுள்ள மக்களில் ஊனமுற்றவர்கள் மற்றும் என்னைப்போன்ற விதவைகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்த வருகின்றனர். இத்தகையவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டியது கடமையாகும்.

ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்றப் போவதாக அரசாங்கம் கூறிவருகின்றது. இவ்வாறு இலங்கையை மாற்ற வேண்டுமானால் முதலில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் உரியவகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதிபாதுகாப்பு வலயங்களில் காணப்படும் கோயில்கள் பூட்டிவைக்கப்பட்டுள்ளன. அங்கு செல்வதற்கு படையினர் அனுமதியளிப்பதில்லை. எனவே, இங்கு செவ்வாய், வெள்ளி தினங்களிலாவது சென்று வழிபட அனுமதி வழங்கப்பட வேண்டும். எனவே, மக்களின் மீள்குடியேற்றத்தில் கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கே அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (அ-2)



# பாக்.இற்கான 35ஆயிரம் கோடியை இரத்துச் செய்தது அமெரிக்கா

(லாகூர்)

பாகிஸ்தானுக்கு ரூபா 35 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் நிதியுதவியை அமெரிக்கா இரத்து செய்துள்ளது. அதற்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து நிதியுதவி மற்றும் இராணுவ உதவிகள் வழங்கி வருகின்றது.

ஆனால் தலிபான், அல்கொய்தா தீவிரவாதிகள் ஒழிப்பில் பாகிஸ்தான் சரிவர செயற்படவில்லை என்று அமெரிக்கா குற்றம் சாட்டியது.

மேலும் பாகிஸ்தான் அமோனியம் நைட்ரேட் மூலம் தயாரிக்கப்படும் ஐ.இ.டி எனப்படும் வெடிகுண்டுகள் மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் அமெரிக்கர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் எந்த உறுதிமொழியையும் அளிக்காததால் ரூபா 35 ஆயிரம் கோடி நிதியுதவியை அமெரிக்கா இரத்து செய்தது. இதற்கான சட்டம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இதற்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.


இது குறித்து பாகிஸ்தான் வெளிவிவாகரத்துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பஷித் கூறியிருப்பதாவது,

பாகிஸ்தானில் எடுக்கப்பட்டு வரும் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளின் உண்மை அறியாமல் குறுகிய மனப்பான்மையுன் அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

உண்மை என்னவென்றே அறியாமல் ஒட்டுமொத்த நிலவரத்தை வைத்து பாகிஸ்தானுக்கான நிதியுதவியை இரத்து செய்துள்ளது. அமெரிக்காவின் அணுகுமுறையால் தவறான முடிவு எடுப்பது என்பது தவிர்க்க முடியாது.

எனினும் பாகிஸ்தான்- அமெரிக்க உறவில் ஏற்பட்டுள்ள சிக்கலை பேச்சுமூலம் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்தார். (அ-2)

# சந்திரனின் ஆராய்ச்சிக்கு விண்கலம் அனுப்பியது ரஷ்யா



(மொஸ்கோ)

ரஷ்யா செவ்வாய் கிரகத்தில் உள்ள சந்திரனின் ஆராய்ச்சிக்காக ஆளில்லா போபோஸ் கிரவுண்டு என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. 200 கிலோ எடையுள்ள அந்த விண்கலம் தன் பணியை அங்கு முடித்து விட்டது. தற்போது அதன் ஆயுட்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து பூமிக்கு மீண்டும் திரும்புகின்றது.

பூமியின் உட்காற்று பாதைக்குள் நுழையும் போது அது 20 முதல் 30 துண்டுகளாக உடையும். அவற்றின் துண்டுகள் பூமியில் மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 6 முதல் 19 ஆம் திகதிக்குள் நடைபெறும் என ரஷ்யாவின் விண்வெளி மையம் தெரிவித்துள்ளது.

பூமியை நெருங்கும்போது அதன் துண்டுகள் நெருப்பு பிழம்பாக மாறும். அவை உடைந்து சிதறுவதால் வெளியேறும் நச்சு எரிபொருள் மற்றும் கதிரியக்க பொருளால் மக்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# உலக வர்த்தக அமைப்பில் இணைந்த ரஷ்யாவுக்கு ஒபாமா வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்யா, உலக வர்த்தக அமைப்பில் சேர்ந்ததற்கு அந்நாட்டு ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ்க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதன்மூலம் அமெரிக்க -ரஷ்ய இருதரப்பு உறவுகள் பலப்படும். இது இரு நாடுகளுக்கும் நன்மை சேர்க்கும் என்றார்.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் காரினே விடுத்த அறிக்கையில்,

18 ஆண்டுகளாக உலக வர்த்தக அமைப்பில் ரஷ்யா சேர்வது குறித்து கேள்வி இருந்து கொண்டேயிருந்தது. இந்நிலையில் தற்போது உலக வர்த்தக அமைப்பு ரஷ்யாவிற்கு அனுமதி அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்றார். (அ-2)

# புகுஷிமா அணுமின் நிலையம் குளிர்விக்கப்பட்ட நிலையில்

(புகுஷிமா)

சுனாமி தாக்குதலால் பாதிப்புக்குள்ளான புகுஷிமா அணுமின் நிலையம் குளிர்விக்கப்பட்ட நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஆதலால் அணுமின் நிலையத்தில் இருந்து கதிரியக்கம் வெளியாவது நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

இந்த அணு உலையை முழுமையாக செயலிழக்க செய்ய குறைந்தது நாற்பது ஆண்டுகளாவது ஆகும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அணு உலையை சுற்றி முன்னர் வசித்து வந்த மக்கள் திரும்ப அந்த பகுதிக்கு மீண்டும் அனுமதிக்கப்படுவார்களா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அப்படியே அனுமதிக்கப்பட்டாலும் அணு உலையை சுற்றி 20 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிகிறது.

அணு உலையில் விபத்து ஏற்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்த பின்னர் தற்போதுதான் அணு உலை குளிர்விக்கப்பட்ட நிலையை அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாரிசில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திய நபருக்கு 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை

வெனிசுலாவைச் சேர்ந்தவர் இலிச் ரமிரேஸ் சன்செஸ். இவர் கடந்த 1975 ஆம் ஆண்டு பாரிசில் 2 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் அளித்தவரை கொலை செய்தார்.

அதன்பின் பல்வேறு இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்.

இந்த குற்றங்களுக்காக 30 ஆண்டுகளுக்கு முன்பு கைது செய்யப்பட்டார்.

மேலும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாகவும் இவர் மீது வழக்குகள் உள்ளன. இந்த வழக்குகளில் இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு கடந்த இருபது ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தன்னை விடுவிக்கக்கோரி பாரிசில் உள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து இருந்தார்.

இவர் மனு மீதான விசாரணையை 7 நீதிபதிகள் அடங்கிய குழு விசாரித்து மீண்டும் ஆயுள் தண்டனை விதித்தது.

இவர் குறைந்த பட்சம் இன்னும் 18 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். (அ-2)




# கடாபி மீதான தாக்குதலின் போது பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்

(வோஷிங்டன்)

லிபியாவில் புரட்சி ஏற்பட்டு ஜனாதிபதி கடாபி கொல்லப்பட்டார். இவரை எதிர்த்து 8 மாதங்கள் நடைபெற்ற போராட்டத்தில் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக நேட்டோபடை குண்டுகளை வீசியது.

இதிலும் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமை கழகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அதன் தலைவர் பிரெட் ஆபிரகாம் கூறும் போது, நேட்டோ படைத்தாக்குதல் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்தத் தாக்குதல் சட்டத்தை மீறிய செயல். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். (அ-2)

# சிங்கப்பூரின் கடல் எல்லையில் அமெரிக்க போர்க்கப்பல்களை நிறுத்துவதற்கு முடிவு

(வோஷிங்டன்)

சிங்கப்பூர் நாட்டின் எல்லையை ஒட்டிய கடற்பகுதியில் அமெரிக்கா தனது கடற்படை போர்க்கப்பல்களை நிறுத்த முடிவு செய்துள்ளது. மேலும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் உள்ள கடற்பகுதிகளிலும் அமெரிக்கா போர்க்கப்பல்களை நிறுத்த திட்டமிட்டுள்ளது. இது சீனாவின் தெற்கு கடல் பிராந்திய பகுதியை ஒட்டி அமையும். சீனாவை அச்சமூட்டும் விதமாக இந்தப் போர்க்கப்பல்கள் நிறுத்தப்படவுள்ளன.

அவுஸ்திரேலியாவும் அமெரிக்காவும் சேர்ந்து வகுத்த திட்டத்தின்படி தெற்கு பசுபிக் பிராந்தியத்தின் கடற்பகுதிகளில் சுழற்சி முறையில் 2 ஆயிரத்து 500 போர்க்கப்பல்களை நிறுத்த முடிவு செய்துள்ளது. அதன்படி வடக்கு அவுஸ்திரேலியாவின் கடற்பகுதிகளில் அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை நிறுத்தியுள்ளது. (அ-2)

# கடாபியைக் கொன்றது எப்படி? லிபிய அரசிடம் வழக்குரைஞர் கேள்வி

(நியூயோர்க்)

முவம்பர் கடாபியை அரசு எதிர்ப்பாளர்கள் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றிருப்பதாகத் தெரிகின்றது.

இப்படிச் செய்ததன் மூலம் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டுவிட்டன. இதற்கு இடைக்கால லிபிய அரசு பதில் சொல்லியே தீர வேண்டும்.

கடாபியின் மகன் சயீஃப் அல் இஸ்லாமும் சிறைபிடிக்கப்பட்டுள்ளார். அவரைச் சித்திரவதை செய்யாமல் ஜெனீவா கோட்பாட்டின்படி நன்கு கவனித்து தேவைப்படும் போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில தலைமை வழக்குரைஞராகப் பதவி வகிக்கும் இத்தாலியர் லூயி மொரேனோ ஓகாம்போ எச்சரித்திருக்கிறார்.

லிபியாவை ஆளும் இடைக்கால அரசு இதற்கு அஞ்சுமா என்று தெரியவில்லை. லிபியா முழுக்க என் வசம்தான் இருக்கின்றது.

அந்நிய கைக்கூலிகள்தான் எதிர்க்கின்றனர். நான் போய் விட்டால் ஆபிரிக்காவுக்கே பாதுகாப்பு இருக்காது என்று தொலைக்காட்சி கேமராக்கள் முன்பாக முழங்கிக் கொண்டிருந்த கடாபி அரசு எதிர்ப்பாளர்கள் தேடியபோது சாக்கடைத் தண்ணீர் போவதற்காகப் புதைக்கப்பட்டிருந்த கொங்கீரிட் குழாய்க்குள் பதுங்கியிருந்தார்.

அவரை வெளியே இழுத்த மக்கள் வீடியோ கமரா முன்னிலையில் அவரைக் காட்டிவிட்டு பின் நையப் புடைத்துள்ளனர்.

பின்னர் இரத்தகாயமும் ரணகாயமுமாக அவர் காட்டப்படுகிறார். அதன் பின்னர் துப்பாக்கிகளால் சுடும் சத்தம் மட்டும் கேட்கிறது. பின்னர் கடாபியின் உடல் காட்டப்படுகிறது.

இதைத்தான் மிகப் பெரிய மனித உரிமை மீறலாக அவர் கருதுகிறார்.

லிபிய அரசுத் தரப்பில் இதற்கு என்ன பதில் என்று தெரியவில்லை. (அ-2)

# இந்தியாவிற்கான அமெ.தூதராக நான்சி பவல் நியமனம்

இந்தியாவிற்கான புதிய அமெரிக்க தூதராக நான்சி ஜே. பவலை ஜனாதிபதி பராக் ஒபாமா நியமித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் திமோதி ரோமர் தனது தூதர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அப்பதவிக்கு நான்சி பவல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த 2 ஆண்டுகளுக்கு இவர் இப்பதவியில் நீடிப்பார் என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது. நான்சி பவல் பாகிஸ்தான் மற்றும் நேபாள நாட்டின் அமெரிக்க தூதரக செயற்பட்டதோடு மட்டுமல்லால் கல்கத்தா, டில்லி, டாக்கா, கத்மண்டு, இஸ்லாமாபாத் மற்றும் ஒட்டாவா நகரங்களில் செயற்பட்டு வரும் அமெரிக்க அலுவலகங்களில் உயர் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

நடுநிலையிலிருந்து கடைப்பிடிக்கும் நிதானமே எந்நாளும் உறுதியாய் நிற்கும்.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தமிழருக்கு எதுவும் தரப்போவதில்லை

வன்னியில் இடம்பெற்ற போர் தொடர்பில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட எல்லா விடயங்களும் உண்மையானவையா என்பதை கண்டறிவதற்காக இன்னொரு ஆணைக்குழு தேவையென்று எவரும் கேட்க மாட்டார்கள்.

அதேநேரம் நல்லிணக்க ஆணைக்குழு அரசிற்கும் படைத்தரப்பிற்கும் எதிராக அல்லது பாதகமாகவும் தனது அறிக்கையை தயாரிக்க முடியாது. அவ்வாறானதொரு அறிக்கை வெளியிடப்படுமாக இருந்தால்,

நல்லிணக்க ஆணைக்குழுவில் இடம்பெற்றவர்களுக்கு நடந்தது என்ன? விசாரணை வேண்டும். [illegible]க சார்பற்ற ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்ற கோசங்கள் ஒரு பக்கத்தில் எழும்.

ஆக, ஆணைக்குழுவில் இடம் பெற்றவர்கள் முதலில் தங்களைப் பாதுகாக்கக் கூடியதான எல்லைக்குள் நின்று கொண்டே அறிக்கையை தயாரிக்க முடியும்–தயாரிக்க வேண்டும்.

மாறாக, தங்கள் தொடர்பில் இன்னொரு ஆணைக்குழு ஏற்படுவதை அவர்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள்.

நம்மை பொறுத்தவரை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை எமக்கு நீதியை பெற்றுத்தருமென்றோ அல்லது பாராளுமன்றத்தில் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விவாதிப்பதோ அர்த்தமற்றது.

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டார்கள் என்று யாரேனும் கற்பனைக்கதை சொல்லியிருந்தால், வன்னிப் போரில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டார்கள் என்று கனவு கண்டிருந்தால் தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமல் போனார்கள் என்று சாத்திரம் சொல்லியிருந்தால் மட்டுமே ஆணைக்குழு தேவைப்பட்டிருக்கும்.

மாறாக வன்னிப் போரில் நடந்தது அத்தனையும் நிஜம். சிறுவர்கள், முதியவர்கள் பெண்கள் என பல்லாயிரக்கணக்கானோர் துடிதுடித்து பலியானது உண்மை.

மூன்று இலட்சம் தமிழ்மக்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து அவர்களை படாப்பாடு படுத்தியது சத்தியம். இதை செய்தவர்கள் யார் என்பதும் தெரிந்த உண்மை.

நிலைமை இதுவாக இருக்கும்போது நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் ஒரு புதிய செய்தியை எங்களுக்கு கூறப்போவதில்லை என்பதும், உயிரிழந்த–காணாமல் போனவர்களை அந்த ஆணைக்குழு மீட்டுத்தரப்போவதில்லை என்பதும் தெரிந்ததே.

இவற்றைத்தான் செய்ய முடியாது. ஆனால் ஆணைக்குழு தமிழ் மக்களுக்கு உரிமையைப் பெற்றுத்தரும் என்றால் கூட பரவாயில்லை. ஆனால் இவை எதுவுமே நடக்கப்போவதில்லை.

ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு வெளிப்படுத்தி இதோ! வன்னிப்போர் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை பெற்றுள்ளோம். சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று உலகுக்கு கூறும் அவ்வளவுதான்.

ஆணைக் குழுவில் இடம் பெற்றவர்களை பொறுத்தவரை நிகழ்காலத்தில் வருமானம், எதிர்காலத்தில் அவர்களின் அந்திமத்தின் போது நல்லிணக்க ஆணைக்குழுவில் இடம்பெற்ற பெரியார்கள் என்ற புகழ் உரை அவ்வளவுதான்.

மற்றும்படி ஆணைக்குழுவின் அறிக்கையால் எதுவுமே எங்களுக்கு கிடைக்காது.

# வடக்குக் கிழக்கை மீண்டும் இணைப்பதால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் இல்லை

## முதலமைச்சர் சந்திரகாந்தன் கணிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தை துண்டாக்குவதற்கே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற பெண்கள் வாழ்வாதார திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசியல் அடையாளம் அற்றவர் களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இன்று முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துகின்றது. கிழக்கின் தனி அலகு தேவையாகவுள்ள முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதனைப் பற்றி பேசப்போகின்றது என கேள்வி எழுப்பியுள்ளார்.

வடகிழக்கை இணைப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்காக, இன்று கிழக்கு மாகாணத்தை துண்டு துண்டுகளாக்கி இங்கு தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்கவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் புத்திஜீவிகள் என்று கூறிக்கொள்வோர் முயற்சிகளில் இறங்கியுள்ளனர் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைக்கப்படுவதால் எந்த நன்மையும் இல்லை. இதனை யாரும் இங்கு கோரவும் இல்லை. இங்குள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது தெரிவியுங்கள், வடகிழக்கு இணைப்பதனால் முஸ்லிம் காங்கிரசுடன் பேசி என்ன திட்டத்தை கொண்டு வரவுள்ளீர்கள். கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு என்ன திட்டம் வைத்துள்ளீர்கள் என்று தெரிவியுங்கள்.

இங்கு ஒரு சமூகத்தின் நலன் என்று கூறி எமது சமூகத்தை அழிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எங்களது பகுதிகளை எங்களால் அபிவிருத்தி செய்ய முடியும். மூன்று இனங்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் நாங்கள் ஒற்றுமையாக தன்னிறைவுடன் வாழவே விரும்புகின்றோம். அதனைகுழப்பி அரசியல் செய்ய யாரும் முன்வரக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

# ஜனாதிபதி பொது மன்னிப்பு யோசனையை எதிர்க்கமாட்டேன்

## சரத் பொன்சேகா கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மன்னிப்புக்கென ஏதாவது தரப்பு முன்வைக்கும் யோசனையை தான் எதிர்க்கப்போவதில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆனால் பொன்சேகாவோ அவரது குடும்ப அங்கத்தவர்களோ அது தொடர்பில் எவ்வித யோசனைகளையும் கோரிக்கைகளையும் முன்வைக்க மாட்டார்க்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவை பார்வையிட நேற்று சிறைச்சாலைக்குச் சென்ற திஸ்ஸ அத்தநாயக்க அவரை பார்த்து விட்டு வெளியில் வந்து ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

ஜனாதிபதி மன்னிப்பு குறித்த யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக் கப்படவுள்ள நிலையில் அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க கங்காராம விகாரையின் விகாராதிபதி தயாராகி வருவதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (பா)

# மின்னும் ஒளி விளக்குகளால் கவனம் கலைக்கப்படாமல் இயேசுவின் மீது கவனத்தை திருப்புவோம்

இன்று திருவருகை காலத்தின் நான்காவது ஞாயிறாகும். இறைவன் தன் தெய்வீக மகிமையை களைந்து நம்மைப்போல் மனிதனாக உடலெடுத்து எம்மிடம் வந்த நினைவுகளையும் நம்மில் தட்டியெழுப்புவதாக வரும் இக்காலம் திருவருகைக்காலம் என்று கூறப்படும்.

கிறிஸ்துவின்பிறப்புவிழாவை கொண்டாட உலகமே தன்னை தயாரித்து வரும் இவ்வேளையில் வண்ண விளக்குகளால் குடில் தயாரித்து அலங்கரித்து பாலன் இயேசுவின் பிறப்பு பெருவிழாவைக் கொண்டாட ஆவலோடு இருக்கின்றோம். இக்காலத்தில் வீதிகளில், வீடுகளில் மினுமினுக்கும் ஒளி விளக்குகளில் நமது கவனத்தை வைக்காமல் உலகில் உண்மையான ஒளியாகிய இயேசு வாசித்த விடயம். கேள்வி: மரியாளை வணங்கக்கூடாது என உரோமன் கத்தோலிக் கர்களுக்கு விளக்குவது எப்படி. இயேசு பூமிக்கு வர மரியாள் ஒருபாத்திரமாக இருந்தாள். அவள் ஒரு பாக்கியமான பெண்தான். அதில் சந்தேகமில்லை வேண்டுமென்றால் ஒரு பாத்திரம் தேவை ப்படுகின்றது. சமைத்த பின்பு சோறுதான் சாப்பிட வேண்டும் பாத்திரத்தை அல்ல. மரியாள் பாத்திரம் இயேசு அந்த உணவு. மரியாளை வழிபடுவது பாத்திரத்தை கடித்துச் சாப்பிடுவது போன்று இருக் கிறது. இந்த வினோத கேள்வியிலிருந் தும் பதிலிலிருந்தும் நாம் அறிவது என்ன? சிலர் கத்தோலிக்கர் பற்றி உண்மையிலேயே தவறான கருத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது தான்.

## பரமபிதா காட்டிய பாதை

கிறிஸ்துவின் வருகை மீது நமது கவனத்தை செலுத்த வேண்டுமென்று இத் திருவருகைக் காலத்தில் அழைக்கின்றது. இன்றைய நற்செய்தி வாசகத்தின் படி நாம் இன்று கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு விழாவை கொண்டாடுகின்றோம். ஒரு வகையில் பார்த்தால் இந்த விழாத்தான் திருச்சபையின் பிறப்பு விழா எனக் கூறிவிடலாம். இறைவனின் திட்டத்திற்கு அன்னை மரியா ஆம் என்று சொன்னதால்தான் இயேசு பிறந்தார். திருச்சபையும் தொடங்கியது. மீட்பின் வரலாறே ஒரு பெண்ணின் ஆம் என்ற சொல்லில்தான்.

நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என நம் அன்னை மரியா விசுவாச அறிக்கை செய்தாள். இதனால் அன்னையைக் கடவுளின் தாய் எனப் போற்றுகின்ற திருச்சபை அதே அன்னையை கடவுளின் தாய் எனவும் வாழ்த்தி புகழ்கின் றது.


கத்தோலிக்க திருச்சபை மரியாவை கடவுளின் நிலைக்கு உயர்த்தி வழிபடுகின்றது என்று சிலர் குற்றம் காண்கிறார்கள். இவ்வாறு குற்றம் காண்பது சரியல்லவென்பதைச்சுட்டிக்காட்டியாகவேண் டும்.

ஒருமுறை இணையத்தளத்தில்

கடவுளுக்கு கத்தோலிக்கர் அளிக்கின்ற ஆராதனையை மரியாவுக்கு வழங்குவதில்லை. ஏனென்றால் மரியா கடவுளின் படைப்பு. கடவுளுக்கு நிகரான நிலை அவருக்கு கிடையாது. ஆனால் கடவுளின் திருமகனாகிய இயேசுவை அன்னைமரியா இந்த உலகத்திற்கு பெற்றுத்தந்தார். ஏனவே அவருக்குச் சிறப்பு மரியாதை செலுத்துவது பொருத்தமே என திருச்சபை கற்பிக்கிறது.

வானதூதர் கபரியேல் மரியாவுக்கு தோன்றி அருள் மிகப்பெற்றவரே என அவரை வாழ்த்துகின்றார். இதிலிருந்து உண்மையிலேயே கடவுள் மரியாவுக்கு ஒரு சிறப்பான மாண்பை அழித்தார் என்பது ஐயமின்றி புலனாகின்றது. கத்தோலிக்கர் மரியாவை கடவுளாக கருதவுமில்லை, நம் மீட்பர் இயேசுவிற்கு நிகராக மரியாவை கொள்வதுமில்லை.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962–965) இந்த உண்மையை அழகாக எடுத்துரைக்கிறது. திருச்சபை வழக்கில் கடவுளுக்கு நாம் அழிக்கின்ற வழிபாடு, ஆராதனை எனவும் மரியாவுக்கு நாம் அழிக்கின்ற மரியாதை, வணக்கம் எனவும் கலைச் சொற்களால் குறிக்கப்படுகின்றன. இதே வத்திக்கான் சங்கம் தரும் போதனை திருச்சபை மரியாவை தனிப்பட்டதொரு வணக்கத்தால் தக்க காரணத்துடன் பெருமைப்படுத்துகிறது.



ஏனெனில் இவர் கடவுளின் தூய்மைமிகு தாய் ஆவார். தூய கன்னியை தொடக்க முதலே, நம்பிக்கை கொண்டோர் கடவுளின் தாய் என்றழைத்து வணங்கினர். திருச்சபையில் என்றும் இருந்துள்ள இவ்வணக்கம் உண்மையிலேயே தனிப்பட்டது. மனிதரான வாக்குக்கும் தந்தைக்கும் தூய ஆவிக்கும் நாம் அளிக்கும் ஆராதனையில் இருந்து உள்ளியபிலேயே இது வேறுபட்டது. இந்த ஆராதனை

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

இவ் வணக்கம் மிகச்சிறந்தவிதமாய் ஊக்குவிக்கும் எனலாம். (திருச்சபை எண்66)

மரியாவுக்கு ஏற்பட்ட மாபெரும் வேதனை துயரமான வேளைகளில் கடவுளால் எல்லாம் இயலும் என்பதை மரியா மிக ஆழமாக உணர்ந்தார். அவர் கடவுளின் அடிமை என்று ஏற்கிறார். மரியா தம்மைப்படைத்து, பாவத்திலிருந்து காப்பாற்றிய கடவுளையே தம் வாழ்வின் மையமாக கொண்டிருந்தார். கடவுளின் திருவுளம் இவ்வுலகில் நிறைவேற வேண்டும் என்பதே மரியாவின் வாழ்வில் மகிழ்ச்சியாக, நோக்கமாக இருந்தது.

உண்மையான மகிழ்ச்சி கேளிக்கைகளில் இல்லை. அந்த மகிழ்ச்சியை நாம் சொந்த முயற்சியால் பெற முடியும் என்று எண்ணாது இயேசுவோடு கொள்ளும் உறவிலிருந்து பெற முடியும் என நம்புவோம்.

# அணுமின் நிலையத்தின் முதற்பிரிவு சில வாரங்களில் செயற்படும்

## பிரதமர் உறுதியளிப்பு



(மொஸ்கோ)

ரஷ்யா உதவியுடன் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணுமின் நிலையத்தின் முதல் யூனிட் இன்னும் ஒரு சில வாரங்களில் செயற்படவுள்ளது. இரண்டாவது யூனிட் அடுத்த ஆறு மாதங்களில் செயற்படும் என பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

தமிழகம் கூடங்குளத்தில் ரஷ்யா உதவியுடன் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு முதல் இரண்டு யூனிட்களின் பணிகள் முடிந்து மின் உற்பத்தி ஆரம்பிக்க இருந்த நிலையில் கூடங்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் இறங்கினர். ஜப்பானில் சுனாமி ஏற்பட்ட போது புகுஷிமா அணுமின் நிலையம் சேதம் அடைந்தது. இதனால், அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. அதே போன்ற ஒரு பாதிப்பு எங்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளது எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மூன்று நாட்கள் நல்லெண்ண நட்புப் பயணமாக பிரதமர் மன்மோகன் சிங், ரஷ்யா சென்றுள்ளார். அவர் ரஷ்ய ஜனாதிபதி மெத்வதேவை சந்தித்துப் பேசியுள்ளார். இதன்பின் இருவரும் கூட்டாக சேர்த்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது மன்மோகன் சிங் கூறியதாவது, அடுத்த சில வாரங்களில் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் யூனிட் அடுத்த சில வாரங்களில் செயற்படவுள்ளது. இரண்டாவது யூனிட் அடுத்த ஆறு மாதங்களில் செயற்படும். கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு தன்மை குறித்து எந்தவிதமான அச்சத்துக்கும் இடமில்லை. பாதுகாப்பு காரணத்தை முன் வைத்து கூடங்குளத்தில் போராட்டம் நடத்தப்பட்டு வருவதை அறிவோம். போராட்டம் நடத்துபவர்கள் எழுப்பும் கவலைகள் அகற்றப்படும். அந்தப் பிரச்சினையில் இருந்து விரைவில் வெளிவருவோம்.

அதிகபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியாவும் ரஷ்யாவும் திட்டமிட்டபடி உறுதியாக இவ்விடயத்தில் மேற்கொள்ளும் என அவர் கூறினார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மூன்று மற்றும் நான்காவது யூனிட்கள் அமைப்பது தொடர்பாக ரஷ்யாமற்றும் இந்தியாவுக்கு இடையே நேற்று முன்தினம் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இது தொடர்பாக ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. இது குறித்து ரஷ்ய அணுசக்தி ஒருங்கிணைப்பு அமைப்பின் தலைவர் செர்ஜி கிரியென்கோ கூறுகையில், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு இந்திய தரப்பு தயாராக உள்ளதா என்பது தெரியவில்லை என்றார்.

அணு நீர்மூழ்கிக் கப்பல் மாத இறுதிக்குள் சப்ளை அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று தாக்குதல் நடத்தும் நீர்மூழ்கி கப்பல் இந்த மாத இறுதிக்குள் இந்தியாவிடம் வழங்கப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

10 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் இந்தக் கப்பல் வழங்கப் படவுள்ளது. இந்தக் கப்பலில் 22 அணு ஆயுத ஏவுகணைகளை வைத்திருக்க முடியும். இந்தக் கப்பலில் இருந்து 3 ஆயிரம் கி.மீ. தூரத்தில் உள்ள இலக்குகளை தாக்க முடியும். பல மாதங்களுக்கு நீருக்குள்ளேயே இருக்கும் திறனும் இந்த கப்பலுக்கு உண்டு எனக் கூறினார். (அ-2)

# தமிழக-கேரள மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

(சென்னை)

தமிழக -கேரள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க இரு மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கை, கம்பம்-குமுளியைத்தாண்டி கேரள எல்லைப் பகுதிகளில் வேலைக்காகச் சென்றுள்ள தமிழக தொழிலாளர்கள் தாக்கப்பட்டு குடும்பத்துடன் தமிழகம் திரும்பியுள்ளது கவலையளிக்கிறது.

அதுபோல தமிழகத்தின் சில பகுதிகளில் கேரளத்தவர் நடத்தும் தொழில் நிறுவனங்கள் மீது நடைபெறும் கல்வீச்சு சம்பவங்கள் வருத்தமளிக்கின்றன. கேரளத்தில் பணிபுரியும் தமிழக மக்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டுமென கேரள மாநில அரசை வற்புறுத்துவதுடன் தமிழகத்திலும் வன்முறை சம்பவங்களுக்கு இடமளிக்காமல் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டுமென தமிழக அரசையும் மார்க்சிஸ்ட் வலியுறுத்துகிறது. (அ-2)

## பாரதச் செய்திகள்

# உலகிலேயே மிக உயரம் குறைவான பெண்மணி



இரண்டடி ஒரு அங்குலம் உயரமே கொண்ட ஜோதி அம்ஜி (வயது 18) உலகிலேயே மிகவும் உயரம் குறைவான பெண்ணாக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் நாக்பூரில் ஹிவ்ரி நகர் பகுதியில் வசித்து வரும் இவர் நேற்று முன்தினம் தன் பிறந்த நாளை பெற்றோர், உறவினர்களுடன் கொண்டாடினார். அப்போது அவருக்கு மேலும் ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது.

உலகிலேயே மிகவும் உயரம் குறைவான பெண்ணாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார் என்பதே அந்தச் செய்தி. கின்னஸ் உலக சாதனை புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த ராப்மோலி என்பவர் கடந்த இரு தினங்களாக அக்கிராமத்தில் முகாமிட்டிருந்தார்.

அப்போது மாறுபட்ட நேரங்களில் அப்பெண்ணின் உயரத்தை மூன்று முறை அளந்து விபரங்களை பதிவு செய்தார். அதேபோல் இவர் தேர்வு செய்த மருத்துவர்களும் அப்பெண்ணை நிறக வைத்து அளந்து பரிசோதித்தனர். அவர் கூறுகையில், இச்செய்தி எனது பிறந்த நாளைக்கு கிடைத்த இரண்டாவது பரிசு. இதன் மூலம் நாக்பூரை உலக வரைபடத்தில் சேர்த்துள்ளேன். பள்ளிக் கல்வி முடித்துள்ள நான் விரைவில் பட்டம் பெற முயற்சிப்பேன் என்றார். (அ-2)

# முல்லைப்பெரியாறு விவகாரத்தினால் நறுமணப் பொருட்கள் விற்பனை வீழ்ச்சி

(திருவனந்தபுரம்)

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தால் தமிழகம், கேரளா இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தால் கேரளாவில் உற்பத்தியாகும் தேயிலை மற்றும் ஏலக்காய் உள்ளிட்ட நறுமணப் பொருட்களின் விற்பனை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தால் தமிழகம், கேரள மாநிலங்களுக்கு இடையே நிலவி வரும் பதற்றம் இன்னும் தணியவில்லை.

கேரளாவில் தேக்கடி, குமுளி, மூணாறு ஆகிய எல்லைப் பகுதிகளில்தான் தேயிலை, ஏலக்காய், மிளகு, சீரகம், கராம்பு உட்பட நறுமணப் பொருட்கள் அதிகளவில் விளைகின்றன. குமுளியில் நறுமணப்பொருள் விற்பனைக்காக பெரிய சந்தையும் உள்ளது. இங்கிருந்து நறுமணப் பொருட்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியும் ஆகிறது. வெளிநாடு விற்பனை மட்டுமன்றி சில்லறை விற்பனைக்காக குமுளி, வண்டிப்பெரியாறு, பாம்பனார் உட்பட சுற்றுலாப் பயணிகள் அதிகம் குவியும் இடங்களிலும் ஏராளமான கடைகள் உள்ளன.

நவம்பர் முதல் ஜனவரி வரைதான் இங்கு இவற்றைப்பெற்றுவதற்கான காலம். இந்த நேரத்தில் தான் ஏராளமான வெளிநாட்டினரும் இங்கு வருகின்றனர். இவர்கள் தேயிலை, ஏலக்காய் உள்ளிட்ட நறுமணப் பொருட்களை அதிகளவில் வாங்கிச் செல்வார்கள். தற்போது ஐயப்ப காலம் என்பதால் பக்தர்களை நம்பி ஏராளமான தற்காலிக கடைகளும் முளைக்கும்.

ஆனால், தற்போது குமுளி வழியாக சுற்றுலாப் பயணிகள், ஐயப்ப பக்தர்கள் உட்பட யாரும் வராததால் இந்தப் பகுதிகளில் தேயிலை, நறுமணப் பொருட்களின் விற்பனை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

குமுளி, வண்டிப் பெரியாறு வழியாக வரும் ஐயப்ப பக்தர்கள் தேங்காய் எண்ணெயை பெருமளவு வாங்கிச் செல்வார்கள். இதனால் இப்பகுதியில் வியாபாரிகள் தேங்காய் எண்ணெயை பெருமளவு இருப்பு வைத்துள்ளனர். பக்தர்களின் வருகை குறைந்து விட்டதால் இந்த விற்பனையும் சரிந்துள்ளது. (அ-2)



தலைநகர் டில்லியில் சர்வதேச இளைஞர் திருவிழாவிற்கான நினைவு மலரை ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வெளியிடுவதையும் அருகில் ஆதித்யா பிர்லா குழும தலைவர் ராஜாஸ்ரீ பிர்லா நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சிதம்பரத்தின் அறிவுறுத்தல்படி அமைச்சர் ராசா செயற்பட்டார்

## சி.பி.ஐ.சிறப்பு மன்றில் தெரிவிப்பு

(புதுடில்லி)

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் அறிவுறுத்தல் படியே முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா செயற்பட்டதாக டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி நேற்று சாட்சியம் அளித்தார்.

இருவரும் இணைந்தே முடிவுகளை எடுத்ததால் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவராக மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தையும் சேர்க்க வேண்டும் என சுப்பிரமணியன் சுவாமி கேட்டுக்கொண்டார்.

டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கக் கோரும் வழக்கில் முக்கிய சாட்சிகளை விசாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து சுப்பிரமணியன் சுவாமி நேற்று ஆஜராகி விளக்கம் அளித்தார்.

நீதிபதி ஓ.பி. சைனியிடம் அவர் சாட்சியம் அளிக்கையி, 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் ராசா மட்டுமே தனியாக குற்றவாளியாக முடியாது ப.சிதம்பரத்துடன் இணைந்து தான் அவர் குற்றம் புரிந்தார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு அமைச்சரவை முடிவின்படி ராசாவும் சிதம்பரமும் தான் ஸ்பெக்டரம் விலையை நிர்ணயிப்பதற்கு அதிகாரம் படைத்தவர்களாவர்.

மேலும் சில ஆவணங்களை முன்வைத்து சுப்பிரமணியன் சுவாமி தனது தரப்பு சாட்சியத்தை அளித்தார்.

இதையடுத்து ப.சிதம்பரத்துக்கு எதிராக சுப்பிரமணியன் சுவாமியின் சாட்சியம் எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி தொடரும் என்று டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிபதி சைனி அறிவித்தார். (அ-2)

# கடத்தப்பட்டோரை விடுவிக்க கோரி

# மக்கள் போராட்ட இயக்கத்தினரால் யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெறுகின்ற கடத்தல் மற்றும் கொலைகளை உடன் நிறுத்துக! இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில்வைத்து கடத்தப்பட்ட லலித்,குகன் ஆகிய இருவரையும் உடன் விடுவிக்குக! என வலியுறுத்தி நேற்று யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் 12.30 மணிதொடக்கம் 1.30 மணிவரை இந்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களே ஆன நிலையில் அங்குவந்த யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தலைமையிலான பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர்.

இருப்பினும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதை அறிந்து கொண்ட பொலிஸார் இடையூறு ஏற்படுத்துவதை தவிர்த்துக்கொண்டனர்.


மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாதவாறு பாதுகாப்பு கடமையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், கடத்தப்பட்ட லலித், குகன் ஆகியோரை விடுதலை செய்! உலக மனித உரிமை நாளில் லலித், குகன் கடத்தப்பட்டார்கள், ஜனநாயகத்தைப் புதைத்துவிட அரசாங்கத்திற்கு இடமளிப்போமா! வடக்கில் கடத்தல் மற்றும் கொலையை நிறுத்து! காணாமல் போனவர்களை தேடிக்கொடு! என்றவாறு எழுதப்பட்டிருந்த வாசகங்களை கையில் ஏந்திநின்றனர்.

சுமார் 250 பேர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோதும் அதில் 10ற் கும் குறைவானவர்களே தமிழர்களாக இருந்தனர்.

இதில் மக்கள் போராட்ட இயக்கத்தில் தேசிய அமைப்பாளரும் ஜே.வி.பி. கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித்தகுமார மற்றும் அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர். மேலும் மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான லலித்குமார வீரராஜ் மற்றும் அவரது நண்பரான குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் கடந்த 10ஆம் திகதிமுதல் காணாமல் போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா-6)

# இலங்கை அணிக்கு இன்னிங்ஸ் தோல்வி



(சென்சூரியன்)

தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவின் சென்சூரியன் நகரில் நடைபெற்ற இப் போட்டியில் மூன்றாவது நாள் தேநீர் இடைவேளைக்குமுன் முடிபடைந்தது.

இப் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களையும் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 411 ஓட்டங்களையும் பெற்றன.

போட்டியின் 3ஆவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 150 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 81 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றியீட்டியது.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் சார்பில் ஆகக் கூடுததலாக திலான் சமரவீர 32 ஓட்டங்களைப் பெற்றார். பின்வரிசை வீரர்களான ரங்கன ஹேரத் 23 ஓட்டங்களையும் திஷர பெரேரா 21 ஓட்டங்களையும் கௌஷல் சில்வா 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இலங்கைஅணியின்முன்வரிசை வீரர்களில் தரங்க பரணவிதான 4 ஓட்டங்களுடனும் திலகரட்ன டில்சான் 6 ஓட்டங்களுடனும் குமார் சங்கக்கார 2 ஓட்டங்களுடனும் மஹேல ஜயவர்த்தன 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மஹேல தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் 9 ஆயிரத்து 999 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் வேர்னன் பிலாண்டர் 49 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் அவரே தெரிவானார். டேல் ஸ்மெய்ன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.


## மீள் கேள்வி அறிவித்தல் 2012

## கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிலையங்களை 01.01.2012 தொடக்கம் 31.12.2012ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : | அலுவலக நாட்களில் மு.ப. 8.30 - பி.ப. 3.00<br>19.12.2011 - 26.12.2011 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | : | 27.12.2011 மு.ப. 10.00 வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | : | 27.12.2011 மு.ப. 10.30 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | : | கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம். |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தலைவர், கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

| இல. | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT,VAT நீங்கலாக மீளளிக்கப்பட மாட்டாது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 01 | பரந்தன் | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| | **கோழியிறைச்சிக் கடை** | | | |
| 01 | உருத்திரபுரம் D10 | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| 02 | கிளிநொச்சி இல.01 | 20,000.00 | 1000.00 | 1,295,000.00 |
| 03 | தருமபுரம் | 10,000.00 | 1000.00 | 181,000.00 |
| | **மாட்டிறைச்சிக் கடை** | | | |
| 01 | பரந்தன் | 20,000.00 | 1000.00 | 1,211,000.00 |
| 02 | கண்டாவ்ளை | 10,000.00 | 1000.00 | 120,000.00 |
| 03 | புன்னைநீராவி | 10,000.00 | 1000.00 | 845,000.00 |
| 04 | வட்டக்கச்சி | 10,000.00 | 1000.00 | 765,000.00 |
| 05 | இரணைமடுச்சந்தி | 20,000.00 | 1000.00 | 1,605,000.00 |
| 06 | கிளிநொச்சி | 20,000.00 | 1000.00 | 3,362,000.00 |

நிபந்தனைகள்

1. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
2. கடந்த கால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரம் உண்டு.
4. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வாரகாலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேசசபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திலிங்கம் குகராஜா
தவிசாளர், கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி.

(C-5215)



## கண்ணீர் அஞ்சலி



### திரு. வேலுப்பிள்ளை அருணகிரிநாதன்

தடையாளி காரைநகரைப்
பிறப்பிடமாகக் கொண்ட
திரு. வேலுப்பிள்ளை
அருணகிரிநாதன் அவர்கள்
காலமானதையிட்டு ஆழ்ந்த
கவலையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா அருஞ்சியன்
குள சித்தி விநாயகன் திருவடியை
அடைய பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் ஸ்தாபனம்
மல்லாவி.

(6987)

உரிமையாளரும்
பணியாளர்களும்



## மரண அறிவித்தல்

### திருமதி மகாலிங்கம் பொன்னம்மா

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் பொன்னம்மா அவர்கள் (17.12.2011) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் சுப்பையா கண்ணம்மாவின் அன்பு மருமகளும் சுப்பையா மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் கிரிஜா, வனஜா(சுவிஸ்),அனுஜா (டென்மார்க்), தனுஜா ஆகியோரின் தாயாரும் சர்வேஸ்வரன் (வலி. தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்), உதயகுமார் (சுவிஸ்), சிவதாசன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கார்த்திகன், பிரணவன், பிரவிந், அபினயா, தாரகன், ஆரனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18.12.2011 ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6988)

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

தகவல்:
சு.மகாலிங்கம் (கணவன்)

# போர்க்குற்ற விசாரணையை...

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மனிதவுரிமைகள் அமைப்புகள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரை ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமூகம் பொறுத்திருந்த போதிலும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முழுமையாக ஆராயப்படவில்லை என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டமைக்கு அமைய இந்த மனித குலத்திற்கு எதிரான போர் குறித்த சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தவறியுள்ளது.

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் தொடர்புடைய இலங்கை அரசாங்க மற்றும் படைத்துறைத் தளபதிகளை பொறுப்புக் கூற வைப்பதற்கான ஒரு வழிமுறையை முன்வைக்க நல்லிணக்க ஆணைக் குழு தவறிவிட்டது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டமைக்கு அமைய இந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த சுயாதீன மான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இப்போரின்போது பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்த அரச படைத் தரப்பினரால் போர்ச் சட்டங்களை மீறும் செயல் மக்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கனரக ஆட்லறித் தாக்குதல்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை என்பதுடன், இச்சம்பவங்கள தொடர்பில் எவ்வித விசாரணைகளுக்கும் நல்லிணக்க ஆணைக்குழு அழைப்பு விடுக்கத் தவறியுள்ளது.

படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட ஐந்து எறிகணைத் தாக்குதல் சம்பவங்களை மட்டும் குறிப்பிட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு அவை குறித்து மேலதிக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என மட்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய முன் வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் சட்டத்துக்கு புறம்பாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து நல்லிணக்க ஆணைக்குழு ஆராயவில்லை.

இப்போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், அரசியல் கைதிகள் மீதான சித்திரவதைகள், சரணடைந்த போராளிகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் போரினால் இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்களை பல மாதங்களாக முகாம்களில் தடுத் து வைத்தமை குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

இதிலிருந்து இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டபோரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறை மூலம் நீதி கிடைக்கப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கூறியுள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை முன்வைத்து இலங்கை அரசாங்கம் இழுத்தடித்து வந்த காலம் தற்போது முடிவுக்கு வந்து விட்டது என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது.

**நாங்கள் அஞ்சியபடி நடந்துவிட்டது**

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களின் ஆதாரங்களையும், ஏனைய போர் நியமங்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் நல்லிணக்க ஆணைக்குழு அலட்சியம் செய்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்பு சபையின் பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சாம் சரீ பி, நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பக்கச்சார்பானதாக அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

ஆயினும் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் தீவிரமாக கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் கண்டறிவுகளுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண் டும் எனவும் சாம் சரீ பி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை நம்பகரமான ஆதாரங்களை முன்வைத்து சர்வதேச விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என பரிந்துரைத்திருந்தது.

அதேபோன்று சனல் 4 தொலைக் காட்சியும் இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகரமான காணொளிகளை வெளியிட்டு இருந்தது.

இவைகளை அடிப்படையாகக் கொண்டு இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இப் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளாது மாற்றுப் பொறிமுறைகள் குறித்த அழுத்தம் அதிகரிக்கும் என கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க பிரதி இராஜாங்க செயலர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (பர)

## சாரணர் ஆணையாளர் போஜன் காலமானார்

இலங்கை சாரண சங்கத்தின் உதவி பிரதம சாரண ஆணையாளரும் இலங்கை முதலுதவிச் சங்கத்தின் பிரதம ஆணையாளருமான ரி.நாகேந்திரம் போஜன் நேற்று முன்தினம் காலமானார்.

வடக்கு மாகாணத்தில் சாரணர்களை உருவாக்குவதிலும் முதலுதவிப் பணிகளுக்கு பயிற்சியளிப்பதிலும் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 11.00 மணிக்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் வட மாகாணத்திலுள்ள சாரணர்கள் அனைவரையும் பூரண சீருடையுடன் காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்றலில் கூடுமாறு யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் ஜி.செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (பர)

# வடக்கிலிரு...

முதலில் உறுதிப்படுத்த வேண்டும் என்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் அண்மைக்காலத்தில் கடத்தல் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான முழுப் பொறுப்பையையும் அரசாங்கம் ஏற்கவேண்டும்.

நாட்டில் கடத்தல்களின் அளவு அபாயகரமாக அதிகரித்து வருகிறது. நாட்டில் சமாதானம் நிலவுகிறது.

யுத்த காலத்தில் கூட இந்தளவு மர்மமான காணாமல் போதல்கள் இடம்பெறவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல, கடத்தல்கள் தொடர்பாக பொறுப்பற்ற கருத்துக்களைக் கூறுவதன் மூலம் அரசாங்கத்தின் ஜோக்கர் பாத்திரத்தை ஏற்றுள்ளார்.

காணாமல்போனவர்கள் திரும்பிவந்து விடுவார்கள் என்று வாராந்த அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் கூறும் தைரியத்தை அவர் கொண்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை சில விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஆனால் சிலவற்றை விட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஒரு தகவல் ஊட்டும் சாதனமாக பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர தேசியப் பிரச்சினைக்கான ஏக அதிகாரம் கொண்டதாக கருதப்படக் கூடாது.

போர் நிறுத்த உடன்படிக்கையானது அப்போது ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட போது, அது தேவையானதாக இருந்தது என இந்த அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகியோர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்தமை அந்த இயக்கத்தை அழிப்பதற்கு மிக முக்கிய பங்களிப்பு செய்த விடயம் என்பதை அது கவனிக்கத் தவறி விட்டது என அவர் கூறினார். (பர)

# ஆணைக்குழு...

சபையின் மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் உள்ளடக்கங்களை இவ்வறிக்கை கொண்டுள்ளதா என்பதை அங்கத்துவ நாடுகள் கவனிக்கும் என நம்புகின்றேன்.

அத்துடன் இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான முயற்சிகளை ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் முன்னெடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் எந்தவொரு இலச்சினையும் இடப்படவில்லை என மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அங்கத்துவ நாடு ஒன்று குறிப்பிட்டுள்ளமை குறித்து ஐ.நா செயலாளரின் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

இக் கேள்விக்குப் பதிலளித்த பர்ஹான் ஹக், நிபுணர்கள் குழுவின் அறிக்கை என்பது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை எனவும் அவ்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனவும் கூறியுள்ளார்.(பர)

# பிலிப்பைன்ஸ்...

பெரும்பாலானோர் வெள்ளம் தாக்கியபோது உறக்கத்தில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது:

பிலிப்பைன்ஸில் பல பகுதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். (ஏற்கெனவே கிடைத்த தகவல் அடிப்படையில் 4ம் பக்கத்தில் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.)


## வேலையாளர்கள் தேவை

இல.127/14, யுமிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும்

**குமார் ரெக்ஸ்** புடவையகத்திற்கு **புடவை விற்பனையாளர்கள்**

(ஆண், பெண்) தேவை. புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும்

அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகட்கு - 077 34 79 774

(சி-5212)

## வீடு காணியுடன் விற்பனை

மந்திகை ஆஸ்பத்திரிக்கும் புலோலி பள்ளிக்கூடத்திற்கும் அருகாமையில் கொடிகாம வீதியில் 10 பரப்புடன் கூடிய 4 அறைகளை உடைய் வசதியான வீடு உடனடி விற்பனைக்கு

தொடர்புக்கு:-

0775916047 Mrs.K. ஸ்ரீஸ்கந்தராஜா

0771130036 Dr. ராமநாதன்

(6923)

## வேலைவாய்ப்பு

- கணனி ரைப் செற்றிங் செய்வதில் நல்ல திறமை உள்ளவர்.
- அலுவலகத்தில் பணிபுரியக்கூடியவர்கள் தேவை. (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

வேலையிடம்: யாழ்.நகர்

தொடர்பு: 0775040714

(6985)

## விடுதலைப் பெருவிழா

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும்

என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

(மத்தேயு 11:28)

Free

பாவத்திலிருந்து!!! சாபத்திலிருந்து!!! தீராத நோயிலிருந்து!!!

பில்லி – சூனியக்கட்டிலிருந்து!!! பிசாசின் பிடியிலிருந்து!!!

அடிமைத்தனத்திலிருந்து!!!

Free

**இயேசு விடுதலை கொடுக்கிறார்...**

17 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு ஒளிவிழா நிகழ்வும் நடைபெறும்.

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

காலம்: 17, 18 மார்கழி 2011

நேரம்: மாலை 4.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,பிரவேசம் இலவசம்.

கடந்த நாட்களில் கிடைக்கப் பெற்ற அற்புதங்களில் சில



அன்ரன் மேரி சுலோஜினி(குருநகர்)
நான்கு வருடங்களாக (15-19) வயதுகளில் பிசாசின் பிடியில் சுய நினைவின்றி வாழ்ந்து வந்த எனக்கு திருச்சபை ஆராதனையில் பங்குபற்றி ஜெபித்த போது பரிபூரண சுகத்தைப் பெற்று சந்தோஷமாக வாழ இயேசு விடுதலை தந்தார்.



யசீலா அருமைத்துரை (அரசடி,நல்லூர்)
சிறுநீரகம் மற்றும் கால் நரம்புகள் செயலிழந்த நிலையில் நடக்க முடியாமல் இருந்தபோது ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகத்தை இயேசு கொடுத்தார்.



அருள்நாயகம் சுரேஸ்
(4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்)
இரண்டு கண்களிலும் 7 வயதிலிருந்து பார்வை குன்றி காணப்பட்டது. 5 தடவைகள் சத்திர சிகிச்சை மூலம் முயற்சித்தும் கிடைக்கப்பெறாத பார்வையை ஜெபத்தின் ஊடாக ஆலோசனை பெற்று மீண்டும் பார்வைபெற இயேசு உதவிசெய்தார்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
இல.673 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி: 021 222 6730


## அறிவித்தல்

## பணிமனை இடமாற்றம்

இல.366, திருநகர் வடக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது நிறுவனம் எதிர்வரும் 19.12.2011ஆம் நாள் திங்கள் முதல் இல.03, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:-கிளிநொச்சி கனகபுரம் வீதியில் மல்லிகா உணவகத்திற்கு அருகில் உள்ள ஒழுங்கையில் புகையிரத வீதிக்கு அருகில்.

- த.ஜெகதீஸ்வரன்

தலைவர்,

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

கிளிநொச்சி.

(சி-5219)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.